Registered as a NewsPaper

விலை ரூபா:10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி-14 | 31-10-2005 | திங்கட்கிழமை | ஓசை-256



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12956)

# இராணுவத்துடன் இயங்கும் ஆயுதக்குழுக்களை வடக்கு-கிழக்கில் அனுமதிக்கக் கூடாது

## -கண்காணிப்புக்குழுவின் பரிந்துரையை சனாதிபதி ஆணைக்குழு ஏற்பு

(கொழும்பு)

*சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுக்களை வடக்கு, கிழக்கு பகுதிகளில் அனுமதிக்கக்கூடாது. அவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்த பரிந்துரையை சிறிலங்கா சனாதிபதி ஆணைக்குழு ஏற்றுக்கொண்டுள்ளது.*

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் கௌசல்யன் படுகொலை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள சனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இந்தக்குழுவின் விசாரணை அறிக்கைகள் கடந்த ஒக்ரோபர் 20ஆம் திகதி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளிக்கப்பட்டன. அதில் ஆயுதக்குழுக்களை களைவது தொடர்பாக போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்புத்தலைவர் ஸ்டீன் ஜோர் ஜென்சென் தெரிவித்திருந்த கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் இந்தக்குழு எதுவித குறிப்பிடத்தக்கபரிந்துரைகளையும் (12ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.,வவுனியா சம்பவங்களைக் கண்டித்து இன்று வவுனியாவில் துக்கதினம்

(செட்டிகுளம்)

யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் இடம் பெற்ற சம்பவத்தினைக் கண்டித்தும் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் இடம் பெற்ற போக்குவரத்து நெருக்கடி சம்பவத்தினையும் கண்டித்தும் இன்று வவுனியா மாவட்டம் தழுவிய துக்க தினம் அனுஷ்டிக்க இருப்பதாக வவுனியா வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. ஆண்டாண்டு காலமாக இராணுவ அடக்கு முறையினை கொண்டு தமிழ் மக்கள் மீது தேவையற்ற பிரயோகங்களினைச் செய்து வருவதாகவும் இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையிலேயே இந்த துக்கதினம் அனுஷ்டிக்கப்பட இருப்பதாகவும் சகல வியாபார நிலையங்களில் கறுப்புக்கொடி கட்டி தமது எதிர்ப்பினை தெரிவிக்க இருப்பதாகவும் வெகுசன அமைப்புக்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (21)

## குடாநாட்டில் மூன்று தாக்குதல்கள்

### கோண்டாவிலில் கைக்குண்டுத் தாக்குதல் இருபொலிசாரும் சிப்பாய் ஒருவரும் காயம்

கோண்டாவிலில் நேற்று இரவு இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு பொலிசாரும் ஒரு இராணுவச்சிப்பாயும் காயமடைந்தனர்.

கோண்டாவில் தபாலகத்தில் வாக்காளர் அட்டைகளுக்கு காவலுக்கிருந்த பொலிசார் மற்றும் சிப்பாய்கள் மீது இரவு 10.00 மணியளவில் உந்துருளியில் வந்த இருவர் (12ஆம் பக்கம் பார்க்க)

### மீசாலையில் இராணுவ வாகனம் மீது கைக்குண்டு வீச்சு; வாகனம்சேதம்

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமத்திற்கு உணவுப் பொருட்களை ஏற்றிச் சென்ற சிறிலங்கா இராணுவ வாகனம் மீது மீசாலையில்வைத்து கைக்குண்டுத் தாக்குதல்நடத் தப்பட்டுள்ளது.

நேற்று மாலை 6.40 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் போது தாக்குதலுக்கு இலக்கான இராணுவ வாகனத்தினுள் இரண்டு கைக்குண்டுகள் வீசப்பட்டதாகவும் (12ஆம் பக்கம் பார்க்க)

### அரசடிச்சந்தியில் காவலரண் மீது கைக்குண்டு வீச்சு

யாழ்நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு சமீபமாக உள்ள அரசடிச் சந்தியில் அமைந்துள்ள இராணுவக் காவலரண் ஒன்றின் மீது கைக்குண்டொன்று வீசப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை வேளை வீசப்பட்ட இக் கைக்குண்டு இராணுவக்காவலரண்மீது வீழ்ந்த போதும்அது வெடிக்காத காரணத்தினால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.


எனினும் கைக்குண்டு வீசப்பட்டதை தொடர்ந்து சம்பவ (12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ புலனாய்வுத்துறை மூத்த அதிகாரி இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ புலனாய்வுத் துறையின் மூத்த அதிகாரி கேணல் ரிஸ்வி மீடின் நேற்றுமுன்தினம் இரவு கிரிபத் கொட பகுதியிலுள்ள அவரது வீட்டிற்கு அருகில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு தனது நண்பர்களைச் சந்தித்துவிட்டு கிரிபத்கொடவில் உள்ள தனது வீட்டிற்கு திரும்பிக் கொண்டிருக்கையில் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்று சில நிமிடங்களுக்குள் அவரது மனைவியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட இனந்தெரியாதோர் வழங்கிய தகவலையடுத்து உடனடியாக அவர் கொழும்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் தலையில்பலத்தகாயமடைந்த அவர் சிகிச்சைகள் பயனளிக்காததன் காரணமாக உயிரிழந்தார். (12ஆம் பக்கம் பார்க்க)



## வாகரையில் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் முயற்சி முறியடிப்பு

### ஒரு போராளி வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல் சம்பவமொன்று முறியடிக்கப் பட்டுள்ளது. இச்சம்பவத்தில் போராளியொருவர் வீரச்சாவைத் தழுவியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலில் கருணா குழு உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு- பொலன்னறுவை மாவட்ட எல்லைப் பகுதியிலுள்ள மதுரங்குளம் குஞ்சுக்குளத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறிலங்கா இராணுவத்தினரின் உதவியுடன் கருணா குழுவினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவி காவலரண் கடமையிலிருந்த விடுதலைப் புலிப் போராளிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## 50 கிலோமீற்றர் தூரம்வரை சென்று வாக்களிப்பது குறித்து புலிகள் விசனம்

### -பவ்ரல் அமைப்பு தலைவர்தெரிவிப்பு

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலுக்காக தாங்கள் வசிக்கும் இடங்களில் இருந்து 50 கிலோ மீற்றர் வரை சென்று தமிழர்களை வாக்களிக்கச் செய்ய அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து, தமிழீழ விடுதலைப் புலிகள் விசனமடைந்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் தலைவர் ரொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் பவ்ரல் அமைப்பின் பிரதிநிதிகள் சந்தித்து உரையாடிய பொழுதே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொசோவோ, கிழக்குத் திமோர், ஈராக், ஆப்கானிஸ்தான் நாடுகளின் ஆபத்தான பகுதிகளில் ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின் கீழ்தான் தேர்தல்கள் நடத்தப்பட்டன. (12ஆம் பக்கம் பார்க்க)

### -யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவு பகுதிகளில்

## புத்தூர் சம்பவத்தை கண்டித்து நேற்று துக்கதினம் அனுஷ்டிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

யாழ்ப்பாணம் புத்தூர் கிழக்குப் பகுதியில் சிறிலங்காப் படைகள் பொதுமக்கள் மீது நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல் களைக் கண்டித்து யாழ்ப்பாணம், முல்லைத்தீவு,கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்று துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பெருமளவான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களில் இயல்பு வாழ்வுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் துக்கதினம் (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வீடு வாடகைக்கு

பஸ் நிலையறோட் கிளிநொச்சி வீதிக்கு அருகே சகல வசதிகளுடன் கூடிய இரண்டு பெரிய வீடுகள் வாடகைக்குண்டு (NGOவிரும்பத்தக்கது) தொடர்பு:-0212285778 (6895)

### கடைகட்டடம் வாடகைக்கு

ஏ.9 வீதி 155 ஆம் கட்டைச் சந்தியில் கடைக் கட்டடம் வாடகைக்கு உள்ளது. தொடர்புக்கு-கோமான் தையலகம்,யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.இல.0212285912. (6890)

### கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியில் பெரியோர்களுக்கான.

## நாடக அரங்காற்றுப் பயிற்சிப் பட்டறை

முன்பள்ளி ஆசிரியர்கள், ஆர்வலர்களைக் கருத்திற்கொண்டு

பிரதியாக்கம்,
நடிப்பு,
இயக்கம்,
உடல் உளப் பயிற்சிகள்

ஆகியவை உள்ளடங்கிய பயிற்சிப் பட்டறை.

டென்மார்க் ஆதவன் ஆசிரியர் அவர்கள் பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

பயிற்சிகள் முடிவில் அரங்காற்றுகையும் சிறப்புச் சான்றிதழும் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு } மாலை 4.30 - 6.30 மணிவரை

மூன்று (03) மாத காலம்.
ஆரம்பம் - 05-11-2005

(30 பயிற்சியாளர்களே சேர்க்கப்படுவர்.
முன்கூட்டியே பதிவு செய்யவும்

கிளி நுண்கலைக் கல்லூரியினர்

(சி-13136)


# புளியங்குளம் வடக்கு புதிய குடியேற்ற கிராமம்

# பொது மக்களிடம் நேற்றுக் கையளிப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வவுனியா புளியங்குளம் வடக்குப் பகுதியில் புதிய குடியேற்றக் கிராமம் ஒன்று அமைக்கப்பட்டு நேற்றுக் காலை 10.00 மணியளவில் பயனாளிகளிடம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் வவுனியா மாவட்டப் பணிப்பாளர் திருஞானசம்பந்தமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இக்குடியேற்றக் கிராமத் திறப்புவிழா நிகழ்வில் கிராமத்தின் பெயர்ப் பலகை யினை வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.ஞானம் திரை நீக்கம் செய்துவைத் தார்.

போர்ச்சூழல்களினால் தங்களது வாழ்வாதாரங்கள் அனைத்தையுமே இழந்து, இடம்பெயர்ந்து வாழ்ந்துவந்த மக்களுக்கே 32 புதிய வீடுகளைக் கொண்ட இக்கிராமம் நேற்று வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக வவுனியா மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்து செட்டிகுளத்திலுள்ள மெனிக் பாம், அடப்பங்குளம் முகாம், சிதம்பரபுரம்முகாம்,பூந்தோட்டம் முகாம்களென பல முகாம்களில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்துவந்த மக்களில் மிகவும் பின்தங்கிய குடும்பங்களுக்கே இப்புதிய கிராமத்தில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நியூஸ்லாந்துக் கிளையின் நிதிப்பங்களிப்பில் வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் நிறுவப்பட்ட இப்புதிய குடியேற்றக் கிராம மக்களுக்கு தொழில் செய்யக் கூடிய தொழில் உபகரணங்கள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் என்பனவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கிராமத் திறப்புவிழா நிகழ்வில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வவுனியா மாவட்ட திட்ட இணைப்பாளர் திருமதி. விஜயலட்சுமி கேதீஸ்வரன், வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.ஞானம், வவுனியா மாவட்ட அரசியல்துறை மகளீர் பொறுப்பாளர் செல்வி.ஆவர்த்தனா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். இந்த நிகழ்வில் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர், வவுனியா மாவட்டப் பொருண்மியப் பொறுப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்களெனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.






# புத்தூரில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை

(வலிகாமம்)

புத்தூர் கிழக்கு அன்னமர் கோவிலடிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்த நூற்றுக்கணக்கான மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு யாழ்-மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக யாழ். மாவட்டஇராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில்தென்னக்கோனுடன் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இடம்பெயர்ந்த குடும்பங்களை இன்று மாலைக்குள் முழுமையாக மீளக்குடியமர்த்துவதற்கான அனைத்துநடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.(37)


## 5 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்...

தாயின் மடியில் 1982 - 07 - 24

தாய் மண்ணின் மடியில் 2000 - 10 - 31



## கப்டன் இற்றிச்செல்வன்

(கந்தசாமி, பிறேமகுமார்)

இம்ரான் பாண்டியன் படையணி

நி. முகவரி-திருமலை,தம்பலகாமம்
த. முகவரி-1 ஆம் வட்டாரம், முள்ளியவளை

ஆண்டுகள் ஐந்து மறைந்தாலும்
அண்ணா உன்பூமுகத்தை மறப்போமா
பகைவனின் கோட்டைக்குள் படுத்துறங்கி
வேவுபார்த்து பல களங்களில் சாதனை படைத்து
தலைவனின் பாராட்டைப் பெற்று தாயக
மண்ணிற்காக உயிர் நீர்த்தவனே உன்
பணி தொடரும்

உன் பிரிவால் துயருறும்,
அப்பா,அம்மா, தம்பிமார்,
தங்கைமார்.

தகவல்:-குடும்பத்தினர்

(6637)

## மனமார வாழ்த்துகின்றோம்



புலமைப்பரிசில் பரீட்சை2005

### ஜனகன் சாரங்கன்

திரு/கோணேஸ்வரா இந்துக்கல்லூரி மாணவன் ஜனகன் சாரங்கன் 2005 தரம் 5 புமைப் பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப்பெற்று மாவட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார். இவருக்கு கற்பித்த ஆசிரியர் திருமதி வனஜா கணேசலிங்கம் அவர்களை உளமார பாராட்டுவதோடு இம்மாணவன் பல்கலையும் பயின்று பல் சாதனைகள் புரிந்திட கண்ணகியின் அருள்வேண்டி மனமார வாழ்த்துகின்றோம்.

பத்தினி தோட்டம்,
வற்றாப்பளை,
முள்ளியவளை.

வாழ்த்துவோர்
சிவகுருநாதர் - பரம்சோதி,
(தாத்தா) - (அம்மம்மா)
கமலா நல்லதம்பி
(அப்பம்மா)
குடும்பத்தினர்.

(6636)

ஒக்ரோபர் வாசிப்பு மாதம்

ஆசிரியர் கல்வியினதும் பயிற்சியினதும் போதாமையை உணர்ந்துகொள்ள.

வருடாந்தச்சந்தா ரூ. 300 மட்டுமே

வாசியுங்கள்

## அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு

தொடர்புகளுக்கு
AHAVILI,3,Torrlngton Vvenue,colombo-7,Srilanka,
TEL:011-2506272 E-MAIL:ahavili @ Viluthu.org

# வியட்நாமில் பறவைக்கய்ச்சலால் மேலும் இருவர் பலியாகினர்

(ஹனாய்)

**கோழி மற்றும் வாத்து இறைச்சி மூலம் பரவும் பறவைக் காய்ச்சல் வியட்நாம், தாய்லாந்து, சீனா போன்ற நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. வியட்நாமில் இதுவரை பறவைக் காய்ச்சலுக்கு 40 பேர் பலியானார்கள். கடந்த சிலநாட்களில் மேலும் 2 பேர் இறந்தார்கள்.**


வியட்நாம் நாட்டிலுள்ள குயங்பின் நகர மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட 14 வயது சிறுமியும், 26 வயது வாலிபரும் சிகிச்சை பலன் அளிக்காததால் இறந்துபோனார்கள். வாத்து இறைச்சி, முட்டை ஆகியவற்றை சாப்பிட்டதால் இந்த இருவருக்கும் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மூன்று நாட்கள் இடைவெளியில் அந்த இரண்டு பேரும் அடுத்தடுத்து இறந்து போனார்கள். பறவைக் காய்ச்சல் எதிரொலியாக சீனாவில் கோழி, வாத்து இறைச்சி விலை மிகவும் சரிந்து விட்டது. ஷாங்காய் நகரில் மொத்த இறைச்சி வியாபாரம் நடைபெறுகிறது. அங்கு விற்பனை 80 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இறைச்சி விலை 60 ரூபாய்க்கும் கீழே குறைந்து விட்டதால். வருமானம் பாதியாக குறைந்து விட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர். மற்றொருபுறம் முன்னெச்சரிக்கையாக பண்ணைகளில் வளர்க்கப்பட்ட ஆயிரக் கணக்கான கோழிகளையும் கொன்று குவித்துள்ளார்கள்.



ஈராக்கிய அமைச்சரவை ஆலோசகர் கலிப் அப்துல்மதி பயணம் செய்தகார்மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அவர் படுகாயமடைந்ததுடன் அவரின் சாரதி பலியானார் ஈராக்கிய பொலிசார் தாக்குதல் நடத்தப்பட்ட காரினை பரிசோதிக்கின்றார்கள்.

# அமெரிக்க உதவியை நாம் ஏற்கவில்லை மறுக்கிறார் கியூபா அதிபர் பிடல்காஸ்ட்ரோ



(ஹவானா)

வில்மா சூறாவளி பாதிப்புக் காரணமாக அமெரிக்க நிவாரண உதவியை முதல் முறையாக கம்யூனிஸ்ட் நாடான கியூபா ஏற்றுக் கொண்டுள்ளது என்ற தகவலை கியூபா.அதிபர் பிடல்காஸ்ரோ மறுத்துள்ளார். கடந்த சில மாதங்களாக மெச்சிக்கோ வளைகுடாப் பகுதியை 'கற்றினா', 'ரீற்றா', 'வில்மா' ஆகிய சூறாவளிகள் தாக்கிகடும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்த சூறாவளிகளால் கியூபா நாட்டுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவும், கியூபாவும் பல ஆண்டு காலமாக பகைமை உணர்வுடன் இருந்து வருகின்றன.இரண்டு மாதங்களுக்கு முன் 'கற்றினா' சூறாவளியால் அமெரிக்காவில் பாதிப்பு ஏற்பட்ட போது ஆயிரம் மருத்துவர்கள், மருந்துப்பொருட்கள் ஆகியவற்றை அனுப்ப கியூபா முன் வந்தது. இதை ஏற்க அமெரிக்கா மறுத்துவிட்டது.சில நாட்களுக்கு முன் வில்மா சூறாவளி கியூபாவையும், அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தையும் கடுமையாக தாக்கியுள்ளது.இதையடுத்து கியூபா நாட்டுக்கு தேவையான நிவாரண உதவிகளைஅளிக்கஅமெரிக்கா முன் வந்தது. இதை கம்யூனிஸ்ட் நாடான கியூபா ஏற்றுக்கொண்டதாக அமெரிக்க வெளியுறவு துறை அறிவித்தது. இதை கியூப அதிபர் காஸ்ட்ரோ மறுத்துள்ளார். கியூபா உதவி அளிக்கமுன் வந்தபோது அமெரிக்கா மறுத்து விட்டது. வில்மா சூறாவளித்பாதிப்புக்கு பின் மூன்று பேர் அடங்கியஆய்வு குழுவை அமெரிக்கா அனுப்புகிறது. இவர்கள் சூறாவளித்தாக்குதலுக்கு முன் ஏற்படுத்த வேண்டிய உள்நாட்டு கட்டமைப்பு பணிகள் குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்.அந்த மூன்று பேர் வரமட்டுமே கியூபா அனுமதி அளித்துள்ளது. நிவாரண உதவிகளை நாங்கள் யாரிடமும் கேட்டுப் பெறவில்லை என்றுமறுப்புத் தெரிவித்துள்ளார்.பிடல்காஸ்ட்ரோ.

# மண்டேலாவைப் பற்றி புத்தகம் வெளியானது

(ஜோன்கன்ஸ்பர்க்)

தென்னாபிரிக்க மக்களுக்கு உரிமை கேட்டு 27 ஆண்டுகள் சிறைவாசம் இருந்தவர் நெல்சன் மண்டேலா. இவரைமையமாகவைத்து ஜோன்ஸ்பர்க்கில் நிக்புச்சனன் என்பவர் "ஏசன் ஆப் ஈஸ்டன்கேப்" என்னும் ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார். இந்தப் புத்தகத்தை நெல்சன் மண்டேலா வெளியிட்டார். இது குறித்து புத்தகத்தை வெளியிடும் நிக்புச்சனன் கூறும்போது, "இதுவரை வந்த புத்தகங்கள் வெள்ளையர்களை கதாநாயகனாகக் கொண்டு வெளி வந்துள்ளன. தற்போது கறுப்பினத்தைச் சேர்ந்த மண்டேலாவை மையமாகக் கொண்டு புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒன்பது பகுதிகளைக் கொண்ட இந்தப் புத்தகத்தில் முதல்பகுதி வெளியிடப்பட்டுள்ளது. இதில் மண்டேலாவின் வாழ்க்கைக் குறிப்புக்கள் கதையாக விபரிக்கப்பட்டுள்ளன." என்று தெரிவித்தார்.



இஸ்லாமியரின் புனித ரமழான் மாதத்தின் இறுதிவெள்ளிக்கிழமை தொழுகைக்காக காஷ்மீர் சிறிநகரில் வரலாற்று சிறப்புமிக்க ஜமியா மசூதியில் கூடியிருந்து தொழும் இஸ்லாமியர்.

# பாகிஸ்தானில் மீண்டும் நில நடுக்கம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் காஷ்மீர் பகுதியில் கடந்த எட்டாம் திகதி பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டு ஆயிரக்கணக்கானவர்கள் பலியானார்கள். இதனையடுத்து பலதடவை அங்கு நில அதிர்வுகள் ஏற்பட்டன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை மீண்டும் பலத்த நில நடுக்கம் ஏற்பட்டது இது 5.9 ரிச்டர் அளவில் பதிவானது. கடந்த இரண்டு வாரத்தில் அதிகஅளவில் நிலவிய இரண்டாவது நில நடுக்கம் இதுவாகும். என்றாலும் உயிர்ச்சேதம், பொருட்சேதம் எதுவும் இல்லை.

# குண்டுத்தாக்குதலுக்கு பாகிஸ்தான் கண்டனம்

(இஸ்லாமபாத்)

டில்லி குண்டு வெடிப்புக்கு பாகிஸ்தான் கண்டனம் தெரிவித்து ள்ளது. "காட்டு மிராண்டித்தனமான இந்தப் பயங்கரவாத தாக்குதல் பாகிஸ்தான் மக்களையும் , அரசையும் அதிர்ச்சி அடையச்செய்து விட்டது. பலியானவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக" பாகிஸ்தான் வெளியுறவு அலுவலக செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# உளவுத்துறை ரகசியங்களை வெளியிட்ட அமெரிக்க அதிகாரி விசாரணையில் சிக்கினார்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் துணை அதிபர் டிக்சென்னியின் உதவியாளராக இருந்த லீவிஸ் லிப்பி மீது அமெரிக்க உளவுத்துறையின் (சி.ஐ.ஏ.) இரகசியங்களை வெளியிட்டதாக புகார் கூறப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது. இந்த விசாரணைக் குழு இரண்டு ஆண்டுகளாக விசாரணை நடத்தி தனது அறிக்கையை தாக்கல் செய்தது. இதில் ஈராக் போர் தொடர்பாக உளவுத்துறையின் இரகசியங்களை லீவிஸ் லிப்பி வெளியிட்டதாகவும் வேறு சில அதிகாரிகளுக்கும் இதில் தொடர்பு உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அதிகாரி லீவிஸ் லிப்பி தனது பதவியை ராஜினாமா செய்தார். அவர் மீது முறைப்படி வழக்குத் தொடரப்பட இருக்கிறது. குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 30 ஆண்டுகள் வரை சிறைத் தண்டணை கிடைக்கும்.



கால்நடைகளைத் தாக்கும் கோமாரிநோய் பீதியால், பிரேசிலில் இருந்து மாட்டிறைச்சியை இறக்குமதி செய்ய 40 இற்கும் மேற்பட்ட நாடுகள் தடைவிதித்துள்ளன. அந்தப் பயத்தைப் போக்க பிரேசில் வர்த்தக சங்கத்தினர் திறந்த வெளியில் பிரம்மாண்டமான அளவில் மாட்டிறைச்சியைச் சமைத்தனர். அடுப்புகளை வைத்து 15 ஆயிரம் கிலோ இறைச்சியை விதவிதமாகச் சமைத்தனர். அதை ஏழாயிரம் பேர் ருசித்தனர்.

# அமெரிக்காவை தாக்க நகரும் புதிய புயல் பீற்றா

(போட்டோ)

கரிபியன் கடற் பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வில்மா' என்ற புயல்உருவாகியது. கியூபா, ஹைத்தி, மெச்சிகோ ஆகிய நாடுகளைத் தாக்கிய இந்தப் புயல் பலத்த சேதத்தை ஏற்படுத்தியது.ஏராளமான உயிர்களையும் பலியெடுத்தது தெரிந்ததே. கற்றினா, ரீற்றா, லட்டான்,வில்மா என்ற பல்வேறு பெயர்களில் புதிதுபுதிதாக புயல் உருவாகும் நிலையில் கரிபியன் கடல் பகுதியில் இப்போது பீற்றா என்ற இன்னொரு புயல் உருவாகி உள்ளது. இந்தப் புயல் இன்று மத்திய-அமெரிக்க நாடான நிக்கரகுவாவை தாக்கும் எனக் கூறப்படுகிறது ஹோண்டு ராசையும் இது தாக்கும் வாய்ப்புஉள்ளது. அது திசை திரும்பி அமெரிக்காவையும் தாக்குமா என்பதுஉறுதிப்படுத்தப்படவில்லை. நிக்கரகுவா கடற்கரைப் பகுதியில் ஏராளமான இந்தியர்களும் வசிக் கிறார்கள். இந்தப் பகுதிகளில் இருந்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் தஞ்சம் புகுந்து வருகிறார்கள். இந்தப் பீற்றா புயல் கொலம்பியாவில் சில பகுதிகளைத் தாக்கியது. அப்போது 155 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசியது.



இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத்தாக்குதலின் போது காயமுற்ற தன் பிள்ளையை முதலுதவி நிலையத்திலிருந்து தூக்கிச்செல்லும் தந்தை

# களமுனைப் போராளிகளின் கவிதைத்தொகுதி

# ஓயாத அலைகள்-03 வெற்றிநாளில் வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

ஓயாத அலை-03 வெற்றிநாளும், களத்திலிருந்து கவிதைகளை எழுதிய மாவீரர்களினதும், போராளிகளினதும் கவிதைத்தொகுப்பு நூல் வெளியீடு எதிர்வரும் ஒக்ரோபர் இரண்டாம் திகதியன்று ஒட்டுசுட்டான் சிவன்கோயில் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் பத்துமணிக்கு நடைபெறவுள்ள மேற்படி கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு வைபவத்தில் அனைவரையும் கலந்து நிகழ்வினை சிறப்பிக்கும் வண்ணம் ஓயாத அலை-03 வெற்றிவிழா நிகழ்வு ஏற்பாட்டுக்குழுவினர் வேண்டியுள்ளனர். (சோ)

# மாவீரர் நாளை உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்க புதுக்குடியிருப்பில் ஒன்றுகூடல்

(புதுக்குடியிருப்பு)

மாவீரர் நாளை மிகவும் உணர்வெழுச்சியுடன் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் கொண்டாடுவதற்கான முன்னேற்பாட்டுக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை காலை பத்துமணிக்கு இப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பணிமனை ஒன்று கூடல் மண்டபத்தில் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தா.சண்முகநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் இவ்வருடம் மாவீரர் நாளைக் கொண்டாடுவதற்கான ஏற்பாட்டுக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. கல்வி அதிகாரிகள், கிராம அலுவலர்கள்,பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், தேசிய எழுச்சிப்பேரவை உறுப்பினர்கள், தொழில்சார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் அனைவரது கருத்துக்களும் பெறப்பட்டு அதற்கேற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கலந்துரையாடலில் பிரதேசப்பொறுப்பாளர் பிறையாளன் கருத்துரை வழங்க, சிறப்புரையை முல்லை.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் வழங்கினார். (08)

# யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்திற்கு விருது

(அலுவலக செய்தியாளர்)

சமூக சேவைகள் அமைச்சினால் முதியோர் இல்லங்களில் சிறந்த முதியோர் இல்லமாக வன்னேரிக்குளம் ஐயனார்புரம் யோகர் சுவாமிகள் திருவடிநிலைய முதியோர் இல்லம் தெரிவு செய்யப்பட்டு அதற்கான விருதும் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.



கிளி.மாவட்ட அரசஅதிபர் தி.இராசநாயகம் அண்மையில் யோகர்சுவாமிகள் திருவடிநிலைய முதியோர் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மேற்படி விருதினை நிர்வாகத்தினரிடம் கையளித்து வைத்தார்.

அத்துடன் நிலையத்திலுள்ள அனைத்து மூதாளர்களுக்கும் மலர் மாலை அணிவித்து சிறப்புப் பரிசில்களை வழங்கிக் கௌரவித்ததுடன் மூன்று முதியோர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கிளி.மாவட்டப் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நந்தகுமார், கரைச்சிப்பிரதேச செயலர் க.சுலோஜினி ஆகியோரும் கலந்து முதியோரைக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கிளி/முல்லை கமக்கார அமைப்புக்களுடன் த.பொ.மே.நிறுவனம் கலந்துரையாடல்

## -எதிர்காலத் திட்டங்கள் குறித்து ஆராய்வு

(விசுவமடு)

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஒழுங்கமைப்பில் கமக்கார அமைப்பினருக்கான முக்கிய சந்திப்பு நிகழ்வு நடைபெற்று வருகின்றது.**

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு, கமக்கார அமைப்பினருக்கான சந்திப்பு கமக்கார அமைப்பு சம்மேளன மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

தொடர்ந்து பூநகரிப்பிரதேச செயலர் பிரிவு, கமக்கார அமைப்பினருக்கான முக்கிய சந்திப்பு நிகழ்வு பூநகரிப் பிரதேசத்தில் நடைபெற்றுள்ளது.

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்கான சந்திப்பு நிகழ்வு தருமபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றுள்ளது. பளைப்பிரதேசத்திலும்இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது.

நிகழ்வுகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ச.விநாயகமூர்த்தி, நடுவப்பணியகத்தைச் சேர்ந்த திட்ட அலுவலர் கி.ஆறுமுகம், பிரதேச செயலர், பிரதேச இணைப்பாளர்கள் கலந்து முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டு வருவதுடன் கால்நடை அபிவிருத்தி பயிர் உற்பத்தி ஏனையவிடயங்கள்பற்றியும் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

ஏனைய பிரதேசங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்தனர். (46)

## -சுனாமியால் பாதிப்புற்றோருக்கு-

# நிரந்தர வீடுகளமைப்பதில் ஏற்படும் தாமதங்கள் குறித்து ஆராய்வு

(முல்லை)


சுனாமியினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு மூன்றாம் கட்ட வேலைத்திட்டத்தில் நிரந்த வீடுகள் அமைப்பதில் ஏற்படும் தாமதங்கள் தொடர்பான சிறப்புக்கலந்துரையாடல் கடந்த 27ஆம் திகதி அன்று காலை 10.30 மணிக்கு கள்ளப்பாடு தற்காலிகக்குடியிருப்பு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்திட்டமிடல் செயலகப் பொறுப்பாளர் யாழ்அமுதன் தலைமையில் ஆரம்பமானது.

கலந்துரையாடலில் முல்லை.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் றஞ்சன், நேப்திட் முல்லை.மாவட்டப் பணிப்பாளர் சி.சிவயேந்தன், மக்கள் சார்பாக கள்ளப்பாடு ஊரக மேம்பாட்டுப் பிரிவைச் சேர்ந்த குணசிங்கம், வண்ணாங்குளம் கிராமமக்கள் சார்பாக நித்தியானந்தன், கடற்புலிகளின் முல்லை.மாவட்டப் பொறுப்பாளர் ம.ரங்கன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். இதில் பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். (20)

# பளையில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட நான்கு கிராமங்கள் மக்களிடம் கையளிப்பு

(விசுவமடு)

பளைப்பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட நான்கு கிராமங்கள் கடந்த வெள்ளியன்று மக்களிடம் கையளிக்கப்பட்டன.



பளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள நான்கு கிராமங்களான தாமரைக்கேணி, வண்ணாங்கேணி, தாமரைக்குளம், பளை ஆகிய கிராமங்களில் ஏழு இலட்சத்து 31ஆயிரத்து 327 சதுர மீற்றர் பரப்பளவு நிலத்தை மனித நேய கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் கண்ணி வெடிகளை அகற்றி பாவனைக்காக மக்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவைச் சேர்ந்த அருந்தவராசா தலைமையிலான குழுவினரே இப்பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடிகள் அகற்றிய கிராமங்களைக் கையளிக்கும் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், பளை பிரதேச செயலர் சிவசிறி, நோர்வே மக்கள் உதவி நிறுவனத்தைச் சேர்ந்த சால்நிக்ஸ்பைவ் ஆகியோர் கலந்து கொண்டதுடன் கருத்துரைகளும் வழங்கப்பட்டது. (46, லோ,கு)

# நூல்கள் வழங்கல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மூன்று தேசிய பாடசாலைகளான புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, புனிதசவேரியார் பெண்கள் கல்லூரி, சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி ஆகியவற்றிற்கு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி மேம்பாட்டு அமைச்சினால் ரூபா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பெறுமதியான கல்வி தொடர்பான நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனை மன்னார் வலயக்கல்விப் பணிமனை பணிப்பாளர் வழங்கினார். (18)

# "பசுந்தேசம்" ஒலிப்பேழை வெளியீடு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனவெளியீடான "பசுந்தேசம்" ஒலிப்பேழை வெளியீட்டு விழா நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் பத்து மணிக்கு புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் மாநாட்டு மண்டபத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முல்லை.மாவட்டப் பொறுப்பாளர் அணிஅழகன் தலைமையில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் பொதுச்சுடரினை புதுக்குடியிருப்புப்பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அதிகாரி"பாபு" ஏற்றினார். தமிழீழத் தேசியக்கொடியினை த.பு.கழக முல்லை.மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தி ஏற்றிவைத்தார். தொடர்ந்து மங்கல விளக்கினை நீர்ப்பாசனத் திணைக்கள முல்லை.மாவட்ட பிரதிப்பணிப்பாளர் சிவகுமார் ஏற்றி வைத்தார். வரவேற்புரையை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த சு.சுகிர்தரூபி வழங்கினார். ஒலிப் பேழையின் வெளியிட்டு உரையினை தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா வழங்கினார். தமிழ்தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரட்ணம் அணிந்துரையினை வழங்கினார். சிறப்புரையினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் வழங்கினார். ஒலிப்பேழை வெளியிட்டினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் வெளியிட்டு வைக்க, செ.முகுந்தன் பெற்றுக்கொண்டார். செ.முகுந்தன் சிறப்புப் பிரதியை வெளியீட்டுவைக்க, கமநல சேவைகள் நிலையப்பெரும்பாக உத்தியோகத்தர் க.மாதவராசா பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. ச.கனகரட்ணம் மற்றும் அரச உத்தியோகப்பிரதி நிதிகள், கமநலப்பிரதிநிதிகள், பொதுஆர்வலர்கள் எனப்பலரும் பெற்றுக் கொணடனர். இதில் பொதுமககள் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (46)

# வைத்தியர் விடுதியில் 3 உந்துருளிகள் திருட்டு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா பொதுவைத்தியசாலையின் வைத்தியர் விடுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வைத்தியர்களின் மூன்று உந்துருளிகள் கடந்த செவ்வாய் இரவு திருடப்பட்டுள்ளன.

திருடப்பட்ட உந்துருளிகளை தேடிய வவுனியா பொலிசார் அவற்றில் ஒன்றை புதன்கிழமை பகல் மீட்டெடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர். அதேவேளை ஏனைய இரு உந்துருளிகளையும் மிக வேகமாக தேடிவருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பூந்தோட்டம் நரசிங்கர் கோயிலுக்கு வந்து கொண்டிருந்த யுவதிஒருவரை உந்துருளியில் வந்த இருவர் வழிமறித்து அவரின் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடியுள்ளனர். (10)

# திருக்குறள் மாநாடும் திருவள்ளுவர் விழாவும்

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச்சங்கம் நடாத்தும் திருக்குறள் மாநாடும் திருவள்ளுவர் விழாவும் எதிர்வரும் 3,4 ஆகிய இரு தினங்களும் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மிகவும் சிறப்புற நடைபெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வுகள் காலை ஒன்பது மணி தொடக்கம் மாலை ஐந்து மணிவரை நடைபெறும் திருக்குறள் கருத்தரங்கு நிகழ்வாக "வள்ளுவர் தந்த இல்வாழ்க்கை" "மாணவர் வாழ்வில் திருக்குறள்", வள்ளுவரும், இளங்கோ அடிகளும்", "வள்ளுவர் தந்த ஆமைகள்", "வள்ளுவர் உள்ளம்" ஆகிய தலைப்பில் கருத்துரைகளும் நடைபெறும். இரண்டாம் நாள் நிகழ்வுகள் மாலை மூன்று மணிக்கு ஆரம்பமாகும். சேரன் நிறுவனத்தின் சேரன் அணிவகுப்பும், சோழன், பாண்டியன் ஆகிய நிறுவனங்களின் அணிவகுப்புகளும் இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மாணவர்களின் இராவணன் அணிவகுப்பும், ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற் சாலையினரின் பண்டாரவன்னியன் அணிவகுப்பும் நடைபெறவுள்ளது. அத்துடன் திருவள்ளுவர் திருவுருவப்பட ஊர்வலம் கிளி.கந்தசுவாமி கோயிலிருந்து ஆரம்பமாகி பண்பாட்டு மண்டபத்தைச் சென்றடையும். கிளி.மாவட்டத்தின் ஏழு பாடசாலை மாணவர்கள் நிகழ்த்தும் கலைநிகழ்வுகளும் வேடப்புனைவுகளும் இடம்பெறவுள்ளது. (14)

- பொலிசாரின் ஆதரவுடன் -

# யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கும் மதுபானக் கடைகள்!

யாழ்ப்பாணத்தில் கடந்த சில மாதங்களில் மதுபானக் கடைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் கசிப்பு உற்பத்தியும் மிகவும் அதிகரித்துக் காணப்படுகின்றது தமிழீழ விடுதலைப்புலிகள் வருகையைத் தொடர்ந்து கசிப்பு உற்பத்தியை நிறுத்திய பலர் மீண்டும் கசிப்பு உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள்

இதே போன்று சட்டவிரோதமான முறையில் கள்ளச் சாராயம் விற்பனை செய்வதிலும் மற்றும் மதுபானக்கடைகளை அமைத்து விற்பனையில் ஈடுபடுவதிலும் கூடிய அக்கறை காட்டிவருகின்றார்கள் இத்தகையவர்கள் மீது சட்ட நடவடிக்கையெடுக்க முடியாதெனப் பொலிசார் கூறி இவர்களின் இத்தகைய செயற்பாடுகளுக்கு ஒத்தாசை வழங்கிவருகின்றார்கள்

மதுவரித் திணைக்களத்தினர் தம்மிடம் ஆயுதங்கள் இல்லை அத்துடன் பாதுகாப்பும் தற்போது இல்லாமையால் எம்மால் எதுவும் செய்ய முடியாதெனக் கூறி இத்தகைய சமூக விரோத நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்காது விட்டுவருவதுடன் மாதாந்தம் குறிப்பிட்ட தொகையை லஞ்சமாகவும் பெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

# தேர்தல் பிரச்சாரம் நடத்த "மக்கள் படை" எதிர்ப்பு

யாழ்ப்பாண பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நேற்று நடைபெறவிருந்த சோசலிச சமத்துவக் கட்சியின் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் சுவரொட்டி காரணமாக இடம்பெறவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் இந்தக் கூட்டம் நடைபெறவிருந்த போதும் மண்டபத்தின் கதவில் சனாதிபதித் தேர்தலை தாம் பகிஷ்கரிப்பதாகவும் எனவே கூட்டங்களை இங்கு நடத்தவேண்டாம் என்றும் சுவரொட்டி ஒன்று ஒட்டப்பட்டிருந்ததாக சோசலிச சமத்துவ கட்சி தெரிவித்துள்ளது.

"மக்கள் படை" என்ற பெயரில் இந்த சுவரொட்டி ஒட்டப்பட்டிருந்ததாகவும தமது உத்தரவை மீறி செயற்பட்டால் எதிர்விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது. (33,32)

- சிறிலங்கா கடற்படையின் துணையுடன் -

# இந்திய இழுவைப்படகுகள் கடல்வளங்களை அபகரிப்பு

## தீவக மீனவ சங்கங்கள் கண்டனம்

(தென்மராட்சி)

**யாழ். தீவகக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் அனுமதியுடன் தமிழ் மக்களின் கடல்வளங்கள், இந்திய இழுவைப்படகு மீனவர்களால் தொடர்ந்தும் அபகரிக்கப்பட்டு செல்வதாக தீவக மீனவ சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.**

இதனால் மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ள முடியாத ஒரு இக்கட்டான சூழல் உருவாகியிருப்பதுடன் தொழில் ரீதியான பாதிப்பையும் பெரும் நஷ்டத்தையும் சந்தித்து வருவதாகவும், கடல்வளத்தை பாதுகாக்கும் நோக்குடன் இழுவைப் படகு மீன்பிடி தடை செய்யப்பட்டுள்ள இவ்வேளையில் இந்திய கொடிகள் கட்டிய நூற்றுக்கணக்கான படகுகள் சிறிலங்கா கடற்படையின் துணையுடன் தமது கடல் வளங்களை அழித்து வருவதாக மீனவ சங்கங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. (28)

## மாணவர் கல்வி வளர்ச்சிக்கான சீட்டிழுப்பில் வெற்றிபெற்றோர்

யாழ். பல்கலைக்கழக விடுதிகளில் இருந்து கல்வி கற்கின்ற வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அனைத்து விடுதிகள் மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி ஈட்டிய அதிர்ஷ்டசாலிகளுக்குரிய இலக்கங்கள்

முதலாம் பரிசு - 2630, இரண்டாம் பரிசு - 4842, மூன்றாம் பரிசு - 2222,

ஆறுதல் பரிசு 8101, 7191, 9547, 7074, 8298, 7969, 9845, 0619, 3800, 5714, பரிசுப் பொருட்களை பாலசிங்கம் விடுதியில் பெற்றுக் கொள்ளலாம். (36)

## கிராமிய பொருளாதார மேம்பாட்டிற்கு ஐ.நா. உதவியுடன் த.பு.கழகம் நடவடிக்கை

நல்லூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அரியாலை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவின் உதவியுடன் பல அபிவிருத்தித் திட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 95 ஆம் ஆண்டு மற்றும் இரண்டாயிரம் ஆண்டுக்காலத்தில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கை கள் காரணமாக இடப்பெயர்வுக ளுக்கு உள்ளாகிய இம்மக்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்பட்டார்கள் இவர்களுக்கு தற்போது தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினர் பல அபிவிருத்தித் திட்டங்களையும் முன்னெடுத்துள்ளார்கள்

சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காக முன்பள்ளிகளுக்கான சத்துணவுத்திட்டங்கள், இளைஞர்களுக்கு வாகனம் ஓட்டுவதற்கான பயிற்சிகள் பெண்களுக்கான தையல் பயிற்சிகள், சமையல் பயிற்சிகள் மற்றும் சிறு கைத் தொழில் முயற்சிக்கான கடன் உதவிகளும் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் வாழ்க்கை நிலையில் பின் தங்கியிருந்த அக்கிராம மக்கள் தமது வாழ்க்கை நிலையை மேம்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளதாக அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள்.




**20.10.2005**
**26.10.2005**

### 20

☐ ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹூசைனிற்கு எதிராக நடத்தப்பட்டுவரும் கொலைக்குற்றச்சாட்டு வழக்கு விசாரணையில் சதாம்தரப்பு பக்க நியாயங்களை எடுத்து வாதிட்ட வழக்கறிஞர் சடவன் நசோலப் அல்-ஜனாவி இனந்தெரியாதவர் களினால் கடத்தப்பட்டுக்கொலை.

☐பலஸ்தீன பிரதமர் மகமுத்அப்பாஸ் அமெரிக்கசனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை வெள்ளை மாளிகையில் சந்தித்து பலஸ்தீன இஸ்ரேல் இடையே ஏற்பட்டுள்ள நெருக்கடிநிலை குறித்து கலந்துரையாடினார்.

☐துருக்கியில் ஏற்பட்ட பூகம்பத்தில் சிக்கி 15பேர் பலியாகினர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

### 21

☐ தமிழகம் கோவையில் இரு பயணிகள் பேருந்து நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் நான்கு பேர் பலி.



☐அமெரிக்காவின் அதிக மக்கள் தொகை யைக் கொண்ட மாகாணமான புளோரிடாவை "வில்மா" புயல் தாக்கியதன் காரணமாக பத்துப் பேர் பலி.




### 22

☐ ஈரான் நாட்டில் மியான் குக் மலைப்பகுதியிலும், சிசிபகுதியிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் போது கட்டடங்கள் அதிர்ந்தன. இரண்டு பேர் காயமடைந்தனர்.

### 23

☐ ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான நைஜீரியாவின் வாக்கோஸ் விமான நிலையத்திலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு தலைநகர் அபுஜாவுக்கு 108 பயணிகளுடன் புறப்பட்ட விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியது.

☐ ஆப்கானிஸ்தானில் நில அதிர்வு ஏற்பட்டதன் காரணமாக ஐந்து பேர் பலியாகியதுடன், ஆறு பேர் காயமடைந்தனர்.

☐ லண்டனில் யூலை மாதம் ஏழாம் திகதி 52 பேரைப் பலிகொள்ளக் காரணமாக இருந்த குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய ஒருவரை பொலிசார் கைது செய்தனர்.

☐ சிரிய எல்லைக்கருகில் உள்ள ஈராக்கியப் பகுதியில் அமெரிக்கப் படைகள் நடத்திய தேடுதலின் போது தீவிரவாதிகளுக்கும் அமெரிக்கப் படைகளுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் 20 தீவிரவாதிகள் பலி.

### 24

☐ஐக்கிய நாடுகள்சபை தனது 60ஆவது ஆண்டுவிழாவைக் கொண்டாடியது.

☐இந்தியாவின் புது டில்லியிலுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோட்டை மீது 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதி பாகிஸ்தானைத் தளமாகக்கொண்டு செயற்படும் லக்ச இ-தொய்பா என்ற தீவிரவாத இயக்கம் தாக்குதல் நடத்தியதில் பாதுகாப்புப்பணியில் ஈடுபட்டிருந்த இரண்டு பேரும், பொதுமகன் ஒருவரும் உயிரிழந்தனர். இது தொடர்பாக கைதுசெய்யப்பட்டவர்களில் 11 பேர்களில் ஏழு பேர் குற்றவாளியாக இனங்காணப்பட்டனர். நான்கு பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

☐தென்பாக்தாத்திலுள்ள முஸேயிப் எனும் நகரில் 12 ஈராக்கிய கட்டடத்தொழிலாளர்கள் துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொலை.

☐ தமிழகத்தில் 44 வருடங்களின் பின் கனமழை 200 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கின, 56 பேர் பலியாகினர்.




☐ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் பலஸ்தீன ஷெரட்டன் விடுதியில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் தங்கியிருந்த போது தற்கொலைப் படையினர் நடத்திய தாக்குதலில் 15 பேர் பலியாகினர், 11 பேர் படுகாயம்.



### 25

☐ அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை மீண்டும் "வில்மா" புயல் தாக்கியதில் ஆயிரக் கணக்கான வீடுகள் சேதமடைந்தன. பலர் பலியாகினர்.



☐ அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் மற்றும் குர்திஷ் தலைவருக்கிடையிலான சந்திப்பு வோஷிங்டனில் இடம் பெற்றது.



☐ பாகிஸ்தான் காஷ்மீர் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.1 புள்ளியாகப் பதிவானது.

☐ வடகிழக்கு ஸ்பானிய நகரான பார்சிலோனாவுக்கருகில் தனியார் விமானமொன்று நான்கு மாடிக்கட்டமொன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்று விமானிகளும், மூன்று பயணிகளும் பலியாகினர்.

### 26

☐ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் விடுதி ஒன்றில் தீவிரவாதிகளினால் நடத்தப்பட்ட கார்க்குண்டுத்தாக்குதலில் 15 பேர் பலி, 11பேர் படுகாயம்.

☐ ஈராக் தலைநகர் பாக்தாத்திலிருந்து இரண்டு ஊழியர்கள் காணாமல்போயுள்ளனர் எனவும் அவர்களை மீட்டுத்தருமாறும் மொராக்கோ அரசு ஈராக்கைக் கோரியது.

# சனாதிபதித் தேர்தலும் எதிர்காலமும்.....?

டெய்லி மிரர் (கெய்த் நோயர்) தமிழில் வடிவேல்

இன்னும் மூன்று வாரங்களில்

அதாவது சரியாக நவம்பர் 18 ஆம் திகதி இந்த நாட்டின் அடுத்த சனாதிபதி யார் என்பதை மக்கள் அறிந்துவிடுவர் அல்லது சில பிரதேசங்களில் மறுவாக்களிப்பு நடைபெற்றால் முடிவு சற்று தாமத மாகலாம்.

இரண்டு பிரதான கட்சிகளும் 50 வீத வாக்குகளுடன் ஒன்றிரண்டை அதிகமாகப் பெறத்தவறின் அடுத்த கட்ட வாக்கு எண்ணிக்கை விகிதாசாரமாக அல்லாது அதிகமாக பெற்றவாக்குகளே கவனத்தில் எடுக்கப்படும் இது ஏனைய ஆதரவு வழங்கும் கட்சிகளின் வாக்குகள் யாருக்கு ஆதரவு தருகிறது என்பதையறிந்து எடுக்கப்படும் முடிவாகும்.

சிலவேளை ஒருவர் மற்றவர் மீது தேர்தல் சம்பந்தமாக முறைப்பாடு செய்து அதன் பின்னர் அது சம்பந்தமாக ஆராயும் உயர் நீதிமன்ற குழுவின் தீர்ப்பு வழங்கும் வரை முடிவு தாமதமாகலாம்

ஆயினும் வெற்றியாளர் அறிவிக்கப்பட்டதுடன் நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்றுக்கான வாய்ப்பு உடனடியாக நடைபெற சாத்தியமிருக்காது. ஆனால் புதிய பிரதமர் ஒருவரை நியமிக்கக் கூடிய சாத்தியம் இருக்கலாம். சிலர் சந்திரிகாவுடைய பதவிக்காலம் முடியும் நாளான டிசம்பர் 22 ஆம் திகதியே புதிய சனாதிபதி பதவியேற்கலாம் என்றும் நம்புகின்றனர்.

அன்று 1988 ஆண்டு நடந்த சனாதிபதித் தேர்தல் ஜே.ஆர். ஜயவர்தனவின் கபடமாகும். அதன் பின் பிரேமதாசா சனாதிபதிப்பதவியை அவரிடமிருந்து பறித்தெடுத்தார்.

அதேபோன்று இப்போதும் நடக்குமா? அன்று ஆறில் ஐந்து பெரும்பான்மை பலம் இருந்தது போன்று தற்போதைய அரசுக்கு கிடையாது. பிரேமதாசா அதனால் 1989 ஆம் ஆண்டு இந்நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியாகப் பதவியேற்றார். அன்று தேர்தல் முடிவு வெளியானதுமே அரசியலமைப்புச் சட்டம் மூன்றாவது திருத்தச் சட்டத்தின்படி சனாதிபதிப் பதவியேற்றுக் கொண்டார் இது அன்று நடந்த சம்பவம். எனவே மகிந்த ராஜபக்ஷவோ ரணில் விக்கிரமசிங்கவோ தேர்தல் முடிவு வெளியாகி 14 நாட்களில் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொள்வர். ராஜபக்ஷ வென்றால் புதிய பிரதமர் ஒருவரை நியமிப்பார் ஆனால் ரணில் வென்றால் பாராளுமன்றில் யாருக்கு ஆதரவும் நம்பிக்கையும் இருக்கிறதோ அவரையே பிரதமராக நியமிப்பார். அது ராஜபக்ஷவாகவோ இருக்கலாம். அல்லது சிறில்ங்கா சுதந்திரக்கட்சியின் வேறொரு உறுப்பினராக அல்லது தமது கட்சியில் ஒருவரை நியமிக்கலாம். அத்துடன் சில வேளை பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி பாராளுமன்றத்தில் தமது பலத்தை நிரூபிக்கலாம். உண்மையில் யார் சனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றாலும் பாராளுமன்றத்தில் அவரது கட்சியின் பலத்தை அதிகரித்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எனினும் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் பாராளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பெறுவது கடினமாகும். அது கடந்த பல வருடங்களாகவே தெளிவாகியிருக்கின்றது. ஆனால் ரணில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்தது போன்று தான் வெற்றி பெற்றால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடனோ அல்லது வேறுகட்சியுடனோ இணைந்து செயற்பட்டால் அவருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்ற தேவையிருக்காது. ஆனால் விக்கிரமசிங்கவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா? அல்லது சாதாரண பெரும்பான்மை ஆதரவைக் கேட்டுச் செல்வாரா என்பது தெரியாது. ஆனால் இரு கட்சிகளும் ஏற்கனவே இனப்பிரச்சினை தொடர்பில் இணைந்து செயற்படுவதாக இணங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் பொதுத்தேர்தல் ஒன்று உடனடியாக நடத்தப்படுவதை அநேகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் வெறுக்கின்றனர். காரணம் அவர்கள் தமது தொகுதி மக்களுக்கு எவ்வித நன்மையும் இதுவரை செய்யவில்லை என்பதால் தாம் தூக்கியெறியப்பட்டு விடுவர் என்ற அச்சமாகும். குறிப்பாக ஜே.வி.பி யினர் இந்த விடயத்தில் பெரிதும் அச்சம் கொண்டிருக்கின்றனர். எனினும் ஐ.தே.க, சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களோடு ஒப்பிடும்போது ஜே.வி.பி உறுப்பினர்கள் சற்று மேலானவர்களாகப்படுகின்றனர். காரணம் நாட்டில் கடந்த வருடம் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோது அவர்கள் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களிடம் சென்று உதவியளித்தனர். ஆயினும் அவர் களுக்கு வழங்கப்பட்ட விவசாயம், மீன்பிடி, கிராமிய சிறுகைத்தொழில் ஆகிய அமைச் சுக்கள் மூலம் அவர்கள் மக்களுக்கு நிறைந்த சேவையையே வழங்கினார்களா? என்றால் அது கேள்விக்குறியே. அந்தவகையில்



அவர்களின் செல்வாக்கை உயர்த்திக் கொள்ளவும் முடியவில்லை. அதனால் கடந்த தேர்தலில் அவர்கள் பெற்றுக் கொண்ட 39 உறுப்பினர்களின் உறுதிப்பாட்டை இன்னும் பாதுகாத்துக்கொள்ள முடியாதுள்ளனர். அத்துடன் ஜே.வி.பி பொதுத்தேர்தல் ஒன்றுக்கு இணங்கினால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் தேர்தல் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தி பல கோரிக்கைகளை முன்வைக்கும். இவ்வாறு உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப் படுமானால் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பிளவுகள் ஏற்படவாய்ப்புண்டு.

உண்மையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனித்து இயங்குமானால் அது தற்போது பெற்றிருக்கும் ஆசனங்களை விட எதிர்காலத் தேர்தலில் அதிகமாகப் பெறலாம். அதேவேளை ஜே.வி.பி க்கு குறைவான வெற்றிகளே கிடைக்கும். ஆனால் மீண்டும் கூட்டணியமைக்குமானால் தற்போதுள்ள ஆசனங்களை விடக் குறைவான ஆசனங்களை ஐ.ம.சு கூட்டு முன்னணி பெற்றுக்கொள்ளும். எனினும் கூட்டுக்கட்சி என்ற வகையில் பட்டியல் முறையிலும் போனஸ் முறையிலும் விகிதாசார பிரதிநிதித்துவத்தின்கீழ் அவை நன்மையடையலாம். எனினும் தற்போதைய கூட்டரசு பதவியேற்று இதுவரை காலமும் மக்களுக்கு எவ்விதமான குறிப்பிடக்கூடிய நன்மைகளையும் செய்யாமலுள்ளது. குறிப்பாக நாட்டில் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினை விவகாரத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காதுள்ளது. இந்த நாட்டில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பிலும், ஐ.தே.கட்சி சார்பிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி சார்பிலும் ஐ.தே. முன்னணி என்ற கட்சி சார்பிலும் பல அரசுகள் தோன்றி மறைந்துள்ளன. ஆனால் இப்போது ஐ.ம.சு முன்னணியின் அமைச்சரவையும் ஐ.தே.கட்சியின் சனாதிபதி ஒருவரும் நாட்டை ஆளும் சூழல் உருவாகினால் அப்படியானால் இரு வெவ்வேறான கட்சிகளும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய சமமாக செயற்படுமா? தெற்கிலுள்ள மக்களை இணக்கப்பாட்டுக்குக் கொண்டுவருமா?

இது இவ்வாறிருக்க பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற்று முடிந்து புதிய அரசு ஒன்று பதவியேற்று அது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால் வழமையாக எதிர்க்கட்சிகளின் கண்டனங்களுக்கு ஆளாகும். அந்த வகையில் ஒருவருட காலத்தில் பாராளு மன்றமும் கலைக்கப்படலாம். அதேபோல சனாதிபதி வேறுஒரு கட்சியாக இருப்பின் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை சுட்டிக் காட்டி பாராளுமன்றத்தைக் கலைக்கலாம். பாராளுமன்றம் வருடத்திற்கு ஒருமுறை கலைக்கப்படுவது போன்று சனாதிபதித் தேர்தல் வருடம்தோறும் நடைபெறும் சாத்தியம் கிடையாது. சனாதிபதி ஒருவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக இருந்தால் என்ன? சர்வாதிகாரியாக இருந்தால் என்ன? அவரை ஆறுவருடங் களுக்கு பதவியிலிருத்திய மக்கள் அவரது பதவிக்காலம் முடியும்வரை அனுபவித்தே தீரவேண்டும். ஆனால் ஒரு கட்சி உறுப்பினர் கட்சியின் கொள்கைக்கு மாறாக செயற்படுவாரானால் அவர் கட்சியின் நடவடிக்கைகளுக்கு நிச்சயம் ஆளாக வேண்டும். ஆனால் அவர் நிறைவேற்று அதிகார சனாதிபதியாக இருப்பின் அவருக்கெதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. காரணம் அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட வராகிறார். அந்த வகையில் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் அநுராவை அவர் பிரதமராக்கு வார் என எதிர்பார்க்க முடியாது. காரணம் தற்போது மகிந்தவின் தேர்தல் பணியில் அவர் கலந்துகொள்ளாமையாகும். சிலவேளை அது மைத்திரிபால சிறிசேனவை சென்றடையலாம். அல்லது தேர்தல்பணியில் கடுமையாக உழைக்கும் மங்கள சமரவீர, விமல்வீரவன்ச ஆகியோரைக்கூட சென்றடையலாம். எது எவ்வாறாயினும் இன்னும் ஆறு வருடங்கள் தாம் யாருடைய சனாதிபதியின்கீழ் ஆளப்படவேண்டும் என்பதை மக்களே தீர்மானிப்பர்.



## மகிந்தவின் விஞ்ஞாபனத்தில் ஜே.வி.பி யின் கொள்கைகள்

### — லங்கா சமசமாஜக் கட்சி விசனம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜே.வி.பி.யினரின் கொள்கைகளை ஆக்கிரமித்திருப்பதாக லங்கா சமச மாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

இது குறித்து சிறிலங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர்பட்டி வீரக்கோன தெரிவிக்கையில் மகிந்தவின் சிந்தனைகள் விடுதலைப் புலிகளின் நோக்கத்தை பூர்த்தி செய்யாவிட்டால் அதில் எந்தவிதமான பயனும் இல்லையெனவும் அவர் தெரிவித்தா. இந்த விடயத்தில் ஜாதிக ஹெல உறுமய அழுத்தம் கொடுக்கும் கட்சியாகச் செயற்படவில்லையெனச் சுட்டிக்காட்டியுள்ள பட்டி வீரக்கோன், கடந்த 1994ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி முன்வைத்த கொள்கைகளுக்கு மாறாக மகிந்தவின் கொள்கைகள் அமைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார். பொது ஜன ஐக்கிய முன்னணி 94ஆம் ஆண்டு முன்வைத்த கொள்கைகளின் மூலம் தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடிந்ததாகவும், எனினும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தற்பொழுது முன் வைத்துள்ள தேர்தல் கொள்கை களின் மூலம்தமிழ்மக்களினதும், விடுதலைப்புலிகளினதும் மனங்களை வெல்ல முடியாதென வும் லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் பட்டி வீரக்கோன் மேலும் தெரிவித்தார்.

## நவ-8இற்குள் தீர்வின்றேல் போராட்டம்!

### -சு.சே தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 8ஆம் திகதிக்கு முன்னர் தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதுவிடின் தொடர்ச்சியான தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவது எனச் சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன. வெள்ளிக்கிழமை நடைபெற்ற அத்தொழிற்சங்க ஒன்றியத்தின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டிலுள்ள போதனா வைத்தியசாலைகளில் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்துவது என்றும், அதன் பின்னர் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வதென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளல் - கார்த்திகை 2005

### தெல்லிப்பழை உதவிஅரசஅதிபர் பிரிவு

யா/தெ/1994 திரு. கார்த்திகேசு திருச்செல்வம்
யா/தெ/ 2035 திரு. கணபதிப்பிள்ளை குணசிங்கம்
யா/தெ/ 2119 திருமதி. ஜெயலக்சுமி மயில்வாகனம்
யா/தெ/2121 திரு. சுப்பிரமணியம் பரமநாதன்
யா/தெ/ 2128 திரு. நல்லதம்பி தர்மபாலு
யா/தெ/2139 திருமதி. சதானந்தம்மா எமில்ஜேம்ஸ்
யா/தெ/2205 திரு. கணபதிப்பிள்ளை தேவராஜா
யா/தெ/ 2208 திரு. அந்துருஸ்பிள்ளை சுந்தம்பிள்ளையோண்
யா/தெ/ 2209 திரு. அப்புக்குட்டி தம்பிஐயா
யா/தெ/ 2212 திரு. தவபுத்திரிசெல்வவதி யேசுதாசன்
யா/தெ/ 2213 திருமதி. இலட்சுமி சின்னத்தம்பி
யா/தெ/ 2215 திரு. இராசையா அப்பாத்துரை
யா/தெ/ 2225 திருமதி. விசாலாட்சி இளையதம்பி
யா/தெ/2231 திரு. தங்கராசா காசிலிங்கம்
யா/தெ/ 2241 திரு. கந்தையா கனகமாணிக்கம்
யா/தெ/2264 திருமதி. லீலாவதி மாசிலாமணி
யா/தெ/ 2295 திருமதி. தங்கரத்தினம் இரத்தினம்
யா/தெ/2306 திரு. மாரிமுத்து சிதம்பரம்
யா/தெ/2329 திருமதி. யோகாம்பிகை விஜயகுலசிங்கம்
யா/தெ/2348 திரு. சின்னத்தம்பி கிருஸ்ணபிள்ளை
யா/தெ/ 2356 திரு. முத்தையா துரைராசா
யா/தெ/2367 திருமதி. கனகம்மா தனபாலசிங்கம்
யா/தெ/2408 திரு. மயில்வாகனம் முத்துத்தம்பி
யா/தெ/2434 திரு. இளையதம்பி இராசநாயகம்
யா/தெ/2443 திரு. கிரிஸ்ரிநல்லையா செல்வரத்தினம்
யா/தெ/ 2469 திரு. சின்னையா சிவபாதசிங்கம்
யா/தெ/ 2491 திரு. கந்தையா சிவலிங்கம்
யா/தெ/ 2544 திரு. கதிரன் முருகேசு
யா/தெ/ 2575 திரு. காசிப்பிள்ளை கணேசரட்ணம்
யா/தெ/2607 திரு. சின்னதம்பி சிங்கராசா
யா/தெ/ 2624 திரு. அப்பச்சி இராசரத்தினம்
யா/தெ/2628 திரு. கதிரவேலு அருளானந்தம்
யா/தெ/ 2684 திரு. சின்னத்துரை குலசேகரம்
யா/தெ/2687 திரு. சூசைப்பிள்ளை எட்வேட்ராசா
யா/தெ/ 2689 திருமதி. சீனியம்மா கதிரமலை
யா/தெ/ 2703 திரு. கந்தையா ஜீவரத்தினம்
யா/தெ/ 2723 திருமதி. தங்கம்மா வைரமுத்து
யா/தெ/2741 திருமதி. மாணிக்கம் சுப்பிரமணியம்
யா/தெ/ 2744 திரு. சிவசம்பு சிவராசா
யா/தெ/ 2758 திரு. பொன்னையா பாலநாதன்
யா/தெ/2761 திரு. கதிரிப்பிள்ளை இளையதம்பி
யா/தெ/ 2791 திருமதி. தங்கரத்தினம் விசுவலிங்கம்
யா/தெ/2808 திரு. செல்லப்பு சிவலிங்கம்
யா/தெ/2830 திரு. நாராயணபிள்ளைநடராசா
யா/தெ/2838 திரு. சின்னதம்பி சிவசம்பு
யா/தெ/2922 திரு. சுப்பிரமணியம் அமரசிங்கம்
யா/தெ/2929 திரு. கந்தையா தேவராசா
யா/தெ/2935 திரு. செபஸ்ரியன் அருளானந்தம்
யா/தெ/ 2944 திருமதி. கனகாம்பிகை சபாரத்தினம்
யா/தெ/ 2956 செல்வி. அன்னலட்சுமி சின்னத்தம்பி
யா/தெ/2967 திருமதி. அன்னலட்சுமி இராசரத்தினம்
யா/தெ/2979 திரு. கந்தையா செல்லையா
யா/தெ/2982 திரு. விசுவநாதர் மயில்வாகனம்
யா/தெ/2991 திரு. சிதம்பரப்பிள்ளை சுந்தரமூர்த்தி
யா/தெ/2993 திரு. சின்னையா இராசையா
யா/தெ/3082 திருமதி. திருப்பதி நடராசா
யா/தெ/3108 திரு. நவரத்தினம் மதியாபரணம்
யா/தெ/3138 திருமதி. திலகவதி தம்பிப்பிள்ளை
யா/தெ/3165 திரு. மாப்பாணர் துரைராசா
யா/தெ/3192 திருமதி. செல்வம் வைத்திலிங்கம்
யா/தெ/ 3221திருமதி. இராசேஸ்வரி திருநாவுக்கரசு
யா/தெ/ 3244 திருமதி. பத்மாதேவி பாலசுந்தரம்
யா/தெ/3252 திரு. துரையப்பா இர்ாசரத்தினம்
யா/தெ/3276 திரு. தம்பிராசா தியாகராசா
யா/தெ/3281 திரு. நாகமுத்து கந்தையா
யா/தெ/3309 திரு. இளையதம்பி குமாரசாமி
யா/தெ/3313 திருமதி. சரஸ்வதி மார்க்கண்டு
யா/தெ/3351 திருமதி. தங்கராணியம்மா கனகசபை
யா/தெ/3368 திரு. மாணிக்கர் சின்னத்துரை
யா/தெ/3394 திரு. கந்தையா நாகலிங்கம்
யா/தெ/3403 திரு. முருகன் வல்லியன்
யா/தெ/3434 திரு. சிவசம்பு இரத்தினம்
யா/தெ/3445 திரு. கந்தையா குலசேகரம்
யா/தெ/3455 திரு. கந்தப்பிள்ளை நடராசா
யா/தெ/3466 திரு. குமாரசாமி சோமசுந்தரம்
யா/தெ/3480 திரு. தம்பிநாதர் செல்லத்துரை
யா/தெ/3499 திருமதி. இராசம்மா தில்லைராசா
யா/தெ/3513 திருமதி. சுமணாதேவி பத்மநாதன்
யா/தெ/3528 திரு. கந்தையா சிவசேகரம்
யா/தெ/3537 திருமதி. வள்ளியம்மை சிவராமன்
யா/தெ/3562 திருமதி. வியாகுலமேனி அந்திரசஸ்ப்பு
யா/தெ/3646 திருமதி. அரியமலர் பங்கிராஜ்
யா/தெ/3649 திருமதி. இரத்தினம் கந்தையா
யா/தெ/3721 திரு. சின்னான் தேவராசா
யா/தெ/3746 திரு. தம்பையா இராசரத்தினம்
யா/தெ/3776 திருமதி. சின்னம்மா வைத்திலிங்கம்
யா/தெ/3779 திருமதி. இரஞ்சிதமலர் அம்பிகைபாகர்
யா/தெ/3801 திருமதி. சின்னம்மா சின்னக்கிளி
யா/தெ/3830 திரு. சித்தர் குழந்தைவேலு
யா/தெ/ 3851 திருமதி. ஆச்சிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை
யா/தெ/3873 திரு. வைரவன் கந்தன்
யா/தெ/ 3879 செல்வி. மனோன்மணி வேலுப்பிள்ளை
யா/தெ/3916 செல்வி. கமலவேணி கந்தையா
யா/தெ/3959 திரு. சண்முகம் பழனிவேல்
யா/தெ/3974 திரு. சின்னவி பெரியதம்பி
யா/தெ/3984 திருமதி. பத்மாசனி உருத்திரமூர்த்தி
யா/தெ/4035 திரு. சின்னப்பு இராசரத்தினம்
யா/தெ/4047 திரு. சதாசிவம் தனபாலசிங்கம்
யா/தெ/4071 திரு. அம்பலம் சின்னப்பிள்ளை
யா/தெ/4077 திருமதி. மனோன்மணி திருமால்
யா/தெ/4093 திரு. காசியர் சபாபதி
யா/தெ/4178 திரு. துரைசிங்கம் பத்மநாதன்
யா/தெ/4196 திருமதி. செல்லம்மா நாகலிங்கம்
யா/தெ/4222 திரு. கந்தையா சின்னத்துரை
யா/தெ/4229 திரு. சின்னத்துரை சுந்தரலிங்கம்
யா/தெ/4250 திரு. சீனிவாசகம் சுப்பிரமணியம்
யா/தெ/4282 திருமதி. சிவநேசம் வேலுப்பிள்ளை
யா/தெ/4317 திரு. மாதவர் ஆறுமுகம்
யா/தெ/4320 திரு. சின்னத்தம்பி வயித்திலிங்கம்
யா/தெ/4342 திரு. செல்லப்பா தம்பிராசா
யா/தெ/4410 திரு. மார்க்கண்டு ஐயாத்துரை
யா/தெ/4414 திரு. ஆண்டி அப்புத்துரை
யா/தெ/4427 திரு. கந்தையா நாகரத்தினம்
யா/தெ/ 4457 திரு. கந்தையா கணேஸ்
யா/தெ/4477 திருமதி. நல்லம்மா வேலாயுதம்பிள்ளை
யா/தெ/4491 திரு. முருகேசு பொன்னுத்துரை
யா/தெ/4493 திருமதி. இராசம்மா நடராசா
யா/தெ/4494 திருமதி. பராசக்தி இராமச்சந்திரன்
யா/தெ/4504 திரு. முருகேசு பொன்னுத்துரை
யா/தெ/4545 திருமதி. நவமணி மாணிக்கவாசகர்
யா/தெ/4570 திருமதி. செல்லம்மா இரத்தினசிங்கம்
யா/தெ/4573 திரு. முருகன் நாகமுத்து.
யா/தெ/4576 திருமதி. சந்திரமலர் புவனச்சந்திரன்
யா/தெ/4594 திரு. கந்தப்பிள்ளை தியாகராசா.
யா/தெ/4621 திருமதி. பகவதிப்பிள்ளை மாணிக்கவாசகர்
யா/தெ/4626 திருமதி. தங்கரத்தினம் கந்தையா
யா/தெ/4634 திருமதி. தங்கம்மா இராசையா
யா/தெ/4693 திரு. வல்லிபுரம் நாகமணி
யா/தெ/4718 திரு. தம்பிராசா சிவசுப்பிரமணியம்
யா/தெ/4753 திரு. சின்னக்குட்டி கதிர்காமத்தம்பி
யா/தெ/4812 திரு. நவரட்ணம் வேலும்மயிலும்
யா/தெ/4837 திருமதி. இலட்சுமிப்பிள்ளை நடராசா
யா/தெ/4847 திரு. மாணிக்கம் கணேசலிங்கம்
யா/தெ/4868 திருமதி. தங்கபூபதி இராசநாயகம்
யா/தெ/4882 திரு. சிதம்பரம் இராசலிங்கம்
யா/தெ/4921 திருமதி. இரத்தினம் சுப்பிரமணியம்
யா/தெ/4962 திருமதி. சின்னம்மா நவரத்தினம்
யா/தெ/4971 திருமதி. செல்வலட்சுமி கந்தசாமி
யா/தெ/4988 திரு. கணபதிப்பிள்ளை கனகரத்தினம்
யா/தெ/5011 திரு. சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்
யா/தெ/5176 திரு. தில்லையம்பலம் ஆறுமுகம்
யா/தெ/5200 திருமதி. மேரிபுஷ்பம் சந்தியாப்பிள்ளை
யா/தெ/5212 திருமதி. விக்ரோறியா சந்தியாப்பிள்ளை
யா/தெ/5240 திருமதி. அழகம்மா கணபதி
யா/தெ/5242 திருமதி. தில்லைமுத்து ஆறுப்பிள்ளை
யா/தெ/5271 திருமதி. மேரி ஞானவதனம் அக்குறூஸ்
யா/தெ/5316 திரு. செல்லப்பா கனகரட்ணம்
யா/தெ/5319 திருமதி. பெலிசிற்றம்மா சிங்கநாயகம்
யா/தெ/5362 திருமதி. இராசலட்சுமி விசுவலிங்கம்
யா/தெ/5364 திரு. குருசுமுத்து யோசேப்
யா/தெ/5369 திரு. தம்பு பொன்னையா
யா/தெ/5379 திரு. குணரெத்தினம் பாலசுப்பிரமணியம்
யா/தெ/5401 திரு. கணபதி கதிரவேலு
யா/தெ/5443 திரு. வயிரவி இராசரத்தினம்
யா/தெ/5460 திருமதி. திரேசம்மா யோன்
யா/தெ/5479 திருமதி. முத்தம்மா செல்லையா
யா/தெ/5524 திருமதி. பிலோமினா செபஸ்தியன்
யா/தெ/5564 திரு. சின்னத்தம்பி துரைச்சாமி
யா/தெ/5569 திருமதி. புவனபூபதி கனகசபை
யா/தெ/5607 திருமதி. மகேஸ்வரியம்மா குணரத்தினம்
யா/தெ/5633 திரு. வைரமணி செல்லன்
யா/தெ/5649 திரு. சுந்தரம் பிறேமதாச
யா/தெ/5694 திருமதி. மேரிதிரேசா இராசநாயகம்
யா/தெ/5713 திருமதி. செல்வரஞ்சிதம் கிறிஸ்ரின் அழகக்கோண்
யா/தெ/5716 திருமதி. சிவபாக்கியம் கோபாலகிருஷ்ண-சாமி
யா/தெ/5718 திரு. செல்லத்துரை வேணுகோபால்
யா/தெ/5764 திரு. தம்பிஐயா இரகுநாதன்
யா/தெ/5772 திரு. நாகமுத்து முருகையா
யா/தெ/5791 திரு. மூத்ததம்பி கந்தசாமி
யா/தெ/5821 திரு. செல்வநாயகம் குணரத்தினம்
யா/தெ/5842 திரு. செல்வநாயகம் நடராசா
யா/தெ/5851 திருமதி. விசுவாசம் அருட்பிரகாசம்
யா/தெ/5855 திருமதி. அங்கயற்கரசி ஸ்ரீபுஸ்பநாதன்
யா/தெ/5861 திரு. நாகமுத்து கந்தசாமி
யா/தெ/5882 திரு. இளையவி வேலுப்பிள்ளை
யா/தெ/5886 திரு. கந்தையா இரத்தினம்
யா/தெ/5934 திரு. தம்பிஐயா கதிர்காமநாதன்
யா/தெ/5991 திரு. வயித்தி காங்கேசு
யா/தெ/5994 திருமதி. தனபாக்கியம் தில்லையம்பலம்
யா/தெ/6036 திரு. அந்தோனிப்பிள்ளை கிருபைராசா
யா/தெ/6056 திருமதி. சின்னத்தங்கம் இராசரத்தினம்
யா/தெ/6081 திருமதி. சோதிப்பிள்ளை தம்பிராசா
யா/தெ/6110 திருமதி. தங்கம்மா கந்தப்பு
யா/தெ/6112 திரு. பெரியதம்பி சோமசுந்தரம்
யா/தெ/6168 திருமதி. அன்னம்மா கென்றி
யா/தெ/6228 திரு. சுப்பிரமணியம் பூலோகசேகரம்
யா/தெ/6326 திரு. வயித்தி அம்பலம்
யா/தெ/6403 திருமதி. நாகி கந்தன்
யா/தெ/6437 திருமதி. திரவியம் செல்லையா
யா/தெ/6487 திரு. சின்னப்பொடி சின்னத்தம்பி

### வேலணைஉதவி அரச அதிபர் . பிரிவு

யா/வே/22 திரு. சைமன் விக்ரர்
யா/வே/29 திரு. சரவணமுத்து கந்தசாமி
யா/வே/35 திரு. மனுவேற்பிள்ளை லூயிஸ்
யா/வே/61 திரு. இராசதுரை ஆனந்தசிவம்
யா/வே/62 திரு. குழந்தை மாரிமுத்து
யா/வே/82 திருமதி. சரஸ்வதி ஆறுமுகம்
யா/வே/88 திருமதி. தனலட்சுமி தர்மலிங்கம்
யா/வே/113 திருமதி. மேரிஜோசேப் மலரம்மா பிரான்சிஸ் சவிரிமுத்து
யா/வே/136 திருமதி. ரேவதி சண்முகம்
யா/வே/139 திரு. தம்பிப்பிள்ளை தம்பிஐயா
யா/வே/158 திரு. இறப்பியேல்பிள்ளை நீக்கிலாஸ்
யா/வே/174 திரு. வேலாயுதன் சிவசாமி
யா/வே/191 திரு. நாகலிங்கம் சின்னராசா
யா/வே/194 திருமதி. சிவபாக்கியம் சிவசம்பு
யா/வே/227 திருமதி. தெய்வாணைப்பிள்ளை தியாகராசா
யா/வே/260 திரு. செல்லையா ஆசைரெத்தினம்
யா/வே/267 திருமதி. பரமேஸ்வரி ஆறுமுகம்
யா/வே/272 திரு. சிவசிதம்பரம் இராமலிங்கம்
யா/வே/275 திரு. கணபதிப்பிள்ளை இராஜகோபால்
யா/வே/319 திரு. ஜயம்பிள்ளை கந்தசாமி
யா/வே/379 திருமதி. தங்கலட்சுமி சபாரெத்தினம்
யா/வே/405 திருமதி. நல்லதங்கம் தம்பியையா
யா/வே/446 திருமதி. மகேஸ்வரி கருணானந்தம்
யா/வே/448 திரு. செல்லையா துரைராசா
யா/வே/455 திருமதி. பார்வதிப்பிள்ளை நடராசா
யா/வே/472 திருமதி. தங்கக்குட்டி மயில்வாகனம்
யா/வே/529 திரு. அப்பையா அம்பிகைபாகன்
யா/வே/535 திருமதி. மங்கயற்கரசி மயில்வாகனம்
யா/வே/550 திருமதி. விவேகம்மா நடராசா
யா/வே/569 திருமதி. இலட்சுமி சோமசுந்தரம்
யா/வே/572 திருமதி. தங்கம்மா சதாசிவம்
யா/வே/575 திருமதி. தங்கரத்தினம் சிவலோகநாதன்
யா/வே/590 திருமதி. சின்னம்மா ஆறுமுகம்
யா/வே/598 திருமதி. யோகம்மா ஏகாம்பரம்
யா/வே/600 திருமதி. யோகாம்பிகை தர்மலிங்கம்
யா/வே/627 திருமதி. சரஸ்வதி சிவகுரு
யா/வே/639 திரு. விசேந்தி அமிர்தவாசகம்
யா/வே/659 திருமதி. தனலெட்சுமி பேரம்பலநாதன்
யா/வே/667 திருமதி. சற்குணம் கணேசு
யா/வே/675 திரு. வயிரமுத்து பசுபதிப்பிள்ளை
யா/வே/686 திருமதி. லெட்சுமி நடராசா
யா/வே/699 திருமதி. சரோஜினிதேவி சாந்தலிங்கம்
யா/வே/712 திருமதி. சிவகாமசுந்தரி முருகேசு
யா/வே/722 திரு. பரமலிங்கம் சுப்பிரமணியம்
யா/வே/736 திருமதி. கண்ணம்மா தம்பையா
யா/வே/755 திருமதி. நாகரத்தினம் செல்லத்துரை
யா/வே/775 திருமதி. கோமளவள்ளி சேவியர்ஸ்ரனிஸ்லொஸ்
யா/வே/776 திருமதி. செல்லம்மா விசுவலிங்கம்
யா/வே/788 திரு. மு. சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு
யா/வே/795 திருமதி. கமலபூரணம் நடேசன்
யா/வே/801 திருமதி. இராசமணி சிவப்பிரகாசம்
யா/வே/814 திரு. சிவகுரு நடேசபிள்ளை
யா/வே/834 திருமதி. கனகம்மா குழந்தைவேலு
யா/வே/836 திருமதி. ரதிதேவி கந்தையா
யா/வே/889 திரு. எட்வேட் அமிர்தலிங்கம்
யா/வே/898 திருமதி. நாகம்மா கணபதிப்பிள்ளை
யா/வே/902 திரு. கந்தையா பகவத்சிங்கம்
யா/வே/927 திரு. ஆறுமுகம் சிவராசா
யா/வே/929 திருமதி. இந்திரபூபதி செல்வநாயகம்
யா/வே/ 935 திருமதி. அருளம்மா சுப்பிரமணியம்
யா/வே/1006 திரு. கந்தையா குலசிங்கம்
யா/வே/1016 திருமதி. மரியம்மா சூசைப்பிள்ளை
யா/வே/1027 திரு. வேலாயுதபிள்ளை பாலசிங்கம்
யா/வே/1039 திரு. நடராஜா வடிவேலு
யா/வே/1054 திருமதி. சொர்ணகாந்தி குமரையா
யா/வே/1066 திருமதி. சிவசோதி குணரெத்தினம்
யா/வே/1072 திருமதி. சிவபாக்கியம் கனகரெத்தினம்
யா/வே/1093 திரு. செல்லப்பா பழனி
யா/வே/1113 திரு. செல்லர் கந்தசாமி
யா/வே/1121 திரு. செல்லப்பா நடராசா
யா/வே/1152 திருமதி. பகீரதலட்சுமி பேரம்பலம்
யா/வே/1155 திரு. தம்பிப்பிள்ளை தவநாயகம்
யா/வே/1160 திரு. தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம்
யா/வே/1182 திருமதி. யோகவதி நாகமணி
யா/வே/1186 திரு. செல்லப்பா இராசலிங்கம்
யா/வே/1197 திருமதி. சரஸ்வதி வினாசித்தம்பி
யா/வே/1206 திருமதி. பூமணி மயில்வாகனம்
யா/வே/1211 திரு. மரியாம்பிள்ளை பத்திநாதன்
யா/வே/1226 திரு. விருத்தாசலம் இராமச்சந்திரன்
யா/வே/1237 திருமதி. பூரணாம்பிகை இராசலிங்கம்
யா/வே/1248 திரு. நமசிவாயம் குமாரசாமி
யா/வே/1253 திரு. நல்லதம்பி வல்லிபுரம்
யா/வே/1257 திருமதி. முத்தம்மா சுந்தரம்பிள்ளை
யா/வே/1260 திரு. செல்லையா அரசரெத்தினம்
யா/வே/1281 திரு. பேதுருப்பிள்ளை கீதபொன்கலன்
யா/வே/1292 திரு. முருகேசு நாகரத்தினம்
யா/வே/1294 திரு. பொன்னுத்துரை இராசலிங்கம்
யா/வே/1308 திருமதி. சிவபாக்கியம் விநாயகமூர்த்தி
யா/வே/1363 திருமதி. லில்லிகிறேஸ் கீதபொன்கலன்
யா/வே/1370 திரு. கந்தையா செல்லத்துரை
யா/வே/1376 திருமதி. பிலோமினம்மா அந்தோனிபர்ணாந்து
யா/வே/1396 திரு. தம்பிப்பிள்ளை நடனசபாபதி
யா/வே/1416 திரு. ஐயம்பிள்ளை நல்லதம்பி
யா/வே/1427 திரு. கனகசபை செல்வநாயகம்
யா/வே/1433 திரு. சுப்பையா கந்தசாமி
யா/வே/1452 திருமதி. குணபதி சிவசம்பு
யா/வே/1483 திருமதி. கில்பட்ஜோஸ் லீனஸ்
யா/வே/1491 திரு. மனுவேற்பிள்ளைசிறில் இராசநாயகம்
யா/வே/1496 திருமதி. ஆச்சிமுத்து விஸ்வலிங்கம்
யா/வே/1497 திரு. தில்லையம்பலம் தம்பிராசா
யா/வே/1500 திரு. மாரிமுத்து நாகேஸ்வரன்
யா/வே/1508 திருமதி. இராசலெட்சுமி வாமதேவன்
யா/வே/1542 திரு. மயில்வாகனம் மகாலிங்கசிவம்
யா/வே/1544 திருமதி. அன்னலட்சுமி மாணிக்கவாசகர்
யா/வே/1553 திரு. கன்கசபை யதுகுலசிங்
யா/வே/1555 திரு. தில்லையம்பலம் இராமச்சந்திரன்
யா/வே/1556 திருமதி. முத்துலட்சுமி தேவராசா
யா/வே/1563 திரு. பிலிப்பையா நீக்கிலஸ்
யா/வே/1571 திருமதி. சுந்தரலட்சுமி காசிப்பிள்ளை
யா/வே/1600 திரு. பரநிருபசிங்கம் அருளம்பலம்
யா/வே/1608 திருமதி. பர்வதம் அமிர்தநாதன்
யா/வே/1611 திரு. தில்லையம்பலம் மதியாபரணம்
யா/வே/1640 திரு. வேலாயுதபிள்ளை செல்லத்துரை
யா/வே/1670 திரு. கோகிலான் சிவகுரு
யா/வே/1695 திரு. தம்பையா தனபாலசிங்கம்
யா/வே/1742 திருமதி. முத்தம்மா சண்முகநாதன்
யா/வே/1751 திரு. கந்தையா அம்பலவாணர்
யா/வே/1756 திருமதி. காமாட்சி சதாசிவம்
யா/வே/1770 திருமதி. புவனேஸ்வரி கிருஸ்ணமூர்த்தி
யா/வே/1772 திருமதி. பரிமளம் விசுவலிங்கம்
யா/வே/1795 திரு. சுப்பிரமணியம் கனகசபை
யா/வே/1802 திருமதி. கனகம்மா பாலசுப்பிரமணியம்
யா/வே/1806 செல்வி. மகேஸ்வரி சுப்பிரமணியம்
யா/வே/1816 திரு. இளையதம்பி சிவப்பிரகாசம்
யா/வே/1829 திருமதி. இரத்தினம் தியாகராசா
யா/வே/1832 திருமதி. பராசக்தி இராமலிங்கம்
யா/வே/1861 திருமதி. கலிஸ்ரா டக்ளஸ்சேவியர்
யா/வே/1875 திரு. முத்துத்தம்பி கனகரெத்தினம்
யா/வே/1882 திரு. லீனப்பு அருளப்பு
யா/வே/1963 திரு. சற்குரு சுப்பிரமணியம்
யா/வே/1965 திரு. முருகேசு நடராஜா
யா/வே/2019 திரு. துரைச்சாமி பரஞ்சோதி
யா/வே/2032 திரு. சுந்தரம் விநாயகமூர்த்தி
யா/வே/2038 திருமதி. இராக்கேல் தேவசகாயம்
யா/வே/2039 திரு. பிலுப்பையா மரியதாசன்
யா/வே/2041 திரு. வேலுப்பிள்ளை கனகரெத்தினம்
யா/வே/2083 திரு. கதிர்காமர் கனகரெத்தினம்
யா/வே/2095 திரு. வேலுப்பிள்ளை சாம்பசிவம்
யா/வே/2131 திரு. இளையதம்பி சுப்பிரமணியம்
யா/வே/2142 திருமதி. றோசம்மா வேலன்
யா/வே/2159 திருமதி. அழகம்மா கந்தசாமி
யா/வே/2170 திரு. வேலுப்பிள்ளை குமாரசாமி
யா/வே/2194 திரு. சின்னையா நடராஜா
யா/வே/2251 திரு. இராசையா பரராசசிங்கம்
யா/வே/2295 திரு. கந்தையா நடராசா
யா/வே/2296 திருமதி. யோகவதி தியாகராசா
யா/வே/2306 திருமதி. திருக்கேதீஸ்வரி கனகசபை
யா/வே/2330 திரு. முத்தன் கந்தசாமி
யா/வே/2334 திரு. சரவணமுத்து சிவலோகநாதன்
யா/வே/2366 திரு. சோமசேகரம்பிள்ளை சீராமலிங்கம்
யா/வே/2387 திரு. சிவசம்பு சிவப்பிரகாசம்
யா/வே/2392 திரு. சங்கரப்பிள்ளை சுந்தரம்பிள்ளை
யா/வே/2417 திருமதி. பாக்கியம் சுப்பிரமணியம்
யா/வே/2451 திரு. சதாசிவம் துரைராஜா
யா/வே/2480 திரு. வைத்திலிங்கம் சுப்பிரமணியம்
யா/வே/2497 திரு. ஆறுமுகம் விசுவலிங்கம்
யா/வே/2513 திரு. ஆறுமுகம் பொன்னுத்துரை
யா/வே/2516 திருமதி. திலகவதி மகாலிங்கம்
யா/வே/2527 திரு. செல்லையா தம்பிராஜா
யா/வே/2556 திரு. ஜேம்ஸ்எட்வேட் பிரான்சிஸ்
யா/வே/2600 திருமதி. அருளம்மா பாலச்சந்திரன்
யா/வே/2625 திரு. நாகலிங்கம் தாமோதரம்பிள்ளை
யா/வே/2628 திருமதி. மேரிசிலியா பேதுருப்பிள்ளை
யா/வே/2662 திரு. நாகலிங்கம் வைத்திலிங்கம்
யா/வே/2668 திருமதி. பரமேஸ்வரி மயில்வாகனம்
யா/வே/2695 திரு. பொன்னையா துரைசிங்கம்
யா/வே/2715 திரு. தம்பையா இலிங்கப்பிள்ளை
யா/வே/2723 திருமதி. பாக்கியலட்சுமி கனகரத்தினம்
யா/வே/2734 திருமதி. கண்மணிப்பிள்ளை பரராஜசிங்கம்
யா/வே/2737 திருமதி. பரமேஸ்வரி கைலாசபிள்ளை
யா/வே/2741 திரு. அம்பலவாணர் ஆறுமுகம்
யா/வே/2774 திரு. சுப்பிரமணியம் பழனிவேற்பிள்ளை
யா/வே/2803 திரு. சந்தியாஸ் சூசைப்பிள்ளை
யா/வே/2831 திரு. கிறிஸ்தோத்திரம் லீனஸ்
யா/வே/2867 திரு. நாகலிங்கம் தேவராஜா
யா/வே/2871 திருமதி. திரேசா யோசப்நாயகம்
யா/வே/2880 திரு. விநாயகமூர்த்தி சிவசாமி
யா/வே/2902 திரு. பசுபதி பொன்னுத்தரை
யா/வே/2926 திருமதி. பூங்காவனம் சோமசுந்தரம்
யா/வே/2928 திருமதி. பாக்கியம் இராசதுரை
யா/வே/2941 திரு. அபுரான் திருச்செல்வம்
யா/வே/2971 திருமதி. யோசேப்பின் ஆசீர்வாதம்

(தொடரும்...)

# இரு தமிழ்ப் பெண்கள் ரணிலின் கூட்டத்தில் கைது

(கொழும்பு)

பொல்காவெலயில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் கூட்டத்திற்கு வந்திருந்த இரு தமிழ்ப்பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொல்காவெலப்பிரதேச சபைக்கு அருகில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு வந்த இந்த இரு பெண்களையும் அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்தனர். தாங்கள் இருவரும் வவுனியாவிலிருந்து வந்ததாக விசாரணைகளில் அப்பெண்கள் கூறியதாகவும் அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

# தேர்தல் பிரச்சாரத்தில் அரச சொத்துக்கள்; இதுவரை 110 முறைப்பாடுகள் பதிவு

அரசாங்க உடமைகளை சனாதிபதித்தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது தொடர்பாக இதுவரை 110 முறைப்பாடுகள் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திற்கு கிடைத்துள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா போக்குவரத்து சபை,மகாவலி அதிகாரசபை, கட்டடப் பொருட்கள்கூட்டுத்தாபனம், கல்வியமைச்சு,தேசிய வருமான வரித்திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்களின் சொத்துக்களை பயன்படுத்துவதும் அதன் ஊழியர்களையும் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதும் தொடர்பான முறைப்பாடுகள் தேர்தல் திணைக்களத்திற்கு கிடைத்துள்ளதாக ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்தார்.

இந்த முறைப்பாடுகள் குறித்து பொலிஸ் துறையின் தேர்தல் தொடர்பான அலுவலகத்திற்கு அறிவித்துள்ளதாக அவர் கூறினார். தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு அரசாங்க சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுமானால் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப செயற்படத்தயாராக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை புத்தளம் மாவட்டத்தில் கூட்டமைப்பினர் அரசாங்க சொத்துக்களைப்பயன்படுத்துவதாக புத்தளம் பாராளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்கே பண்டார விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)


## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## பெருந்தெருக்கள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# கேள்வி கோரல்

**இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள் கட்டுமானத்தை செயற்படுத்தும் திட்டங்களின் (STAART) கீழான சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் (JBIC) நிதி வழங்கல்கள்.**

**உள்;ளூர் போட்டிக்குரிய கேள்வி கோரல்கள்**

**யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை வீதியின் 14+000 தொடக்கம் 31+000 கி.மீ. வரையுள்ள பகுதியை மீள் கட்டுமானம் செய்தல்.**

01 பொதுமுகாமையாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA) யாழ்ப்பாணம் - பொன்னாலை - பருத்தித்துறை வீதியில் 14+000 தொடக்கம் 31+000 கி.மீ வரையுள்ள பகுதியை மீள் கட்டுமானம் செய்வதற்கான மூடிய கேள்விப் பத்திரங்களை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கேள்விச் சபையின் சார்பாக பெற்றுக்கொள்வார்.கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 23.11.2005 அன்று பிற்பகல் 2.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர் வடக்கு/கிழக்கு (வடக்கு) அவர்களின் யாழ்ப்பாண, வவுனியா காரியாலயங்களில் கிடைக்கும் கேள்விப்படிவங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல்வேண்டும். கேள்விப்பத்திர ஆவணங்கள் 31.10.2005 தொடக்கம் 21.11.2005 வரையான காலப்பகுதியில் மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர கட்டணமான ரூபா1759/=(பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளவேண்டும்.

02 நிறைவேற்று நிறுவனம் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகும்.

03 தகுதிவாய்ந்த கூறுவிலை கோருபவர்கள் பின்வரும் தகைமைப்பிரமாணங்களிற்கு இணங்குதல் வேண்டும்.

அ. கேள்வி கோரலிற்கு விண்ணப்பிப்பவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணத்துறையில் தரம் M3 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல்வேண்டும்.

ஆ. கேள்விகோரலிற்கு விண்ணப்பிப்பவர் இலங்கை தேசிய நிர்மாண சங்கத்தில் (NCASL) செல்லுடியானஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக்கொள்ளும் பொழுதும், ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

04 கேள்விப்பத்திர ஆவணங்களை எதுவித கட்டணமுமின்றி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப்பணிப்பாளர் வடக்கு /கிழக்கு (வடக்கு) அவர்களின் யாழ்ப்பாணம் மற்றும் கண்டிவீதி, வவுனியா ஆகிய அலுவலகங்களில் பார்வையிடலாம்.

05 கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவுறும் திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாகும்.

06 கேள்விப்பாதுகாப்புக் கட்டணத் தொகையான ரூபா எண்ணூற்றைம்பதாயிரம் (850,000/=) பெறுமதிக்குரிய பத்திரங்கள் கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும் செல்லுபடியாகும் பாதுகாப்புப்பணப் பத்திரங்கள் இணைக்கப்படாத கேள்விப்பத்திர ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

07 முன்கேள்விகோரல் கூட்டம் 17.11.2005 அன்று காலை 10 மணிக்கு மாகாணப் பணிப்பாளர், வடக்கு, கிழக்கு (வடக்கு) அவர்களின் கண்டிவீதி, வவுனியா அலுவலகத்தில் நடைபெறும்.

08 மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்களின் இரு பிரதிகள் பொதுமுகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முதலாவது மாடி "செத்சிறிபாய" பத்தரமுல்ல அலுவலகத்திற்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ முடிவுறும் நேரத்திற்கு முன்பாக சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

09 பெற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திர ஆவணங்கள் மேலே குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பொது முகாமையாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, முதலாவது மாடி "செத்சிறிபாய" பத்திரமுல்ல அலுவலகத்தில் திறந்துபார்க்கப்படும். கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவர்களது அதிகார பூர்வ பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் குறித்த நேரத்தில் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

10 மேலதிக விபரங்களிற்கு தயவுசெய்து மாகாணப்பணிப்பாளர்/வடக்கு - கிழக்கு (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா, தொலைபேசி இலக்கம் 024-2222826, 024-222 0679, தொலைநகல் இலக்கம் 024-2222826 மாகாணப்பணிப்பாளர்/வ-கி(வடக்கு) யாழ்ப்பாணம். தொலைபேசி இலக்கம் 021-222 2517 தொலைநகல் இலக்கம் 021.222 2517பிரதான பொறியியலாளர் யாழ்ப்பாணம், தொலைபேசி இலக்கம் 021-2222968 என்பவர்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**ஆர். டபிள்யு.ஆர் பேமசிறி,**
**பொதுமுகாமையாளர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.** (சி-13651)

**எந்திரி மோசஸ் மரியதாசன்,**
**மாகாணப்பணிப்பாளர் வ/கி (வ)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**யாழ்ப்பாணம்.**


# சுங்கவரியின்றி தருவிக்கப்பட்ட இயந்திரங்கள் பறிமுதல்

(கொழும்பு)

சுங்க வரியை செலுத்தாமல் இறக்குமதி செய்யப்பட்டதாகக் கூறப்படும் இயந்திரங்கள் சிலவற்றுடன் கொள்கலன் வாகனம் ஒன்றை சிறிலங்காப் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிசாரின் அவசர அழைப்பு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த இயந்திரங்கள் சிலாபத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் இரண்டு பேரை பொலிசார் கைது செய்துள்ளதாக சிலாபம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காமினி அமரகோன் தெரிவித்தார்.

தச்சுத் தொழிலுக்கு பயன்படுத்தப்படும் இந்த இயந்திரங்கள் இதற்கு முன்னரும் ஜா-எல பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு வழங்கப்பட்டதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர்.

இத்தாலியில் இருந்து தருவிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்தப் பொருட்களுக்கான சுங்கத் தீர்வை பெறப்பட்டதற்கான ஆவணங்கள் சந்தேக நபர்களிடம் இருக்கவில்லை எனவும் பொலிசார் தெரிவித்தனர்.


**சலுகை விலையில்**
**யாழ்-கொழும்பு விமானக் கட்டணம்.**
**சலுகை விலையில்**
**கொழும்பு,சென்னை விமானக்கட்டணம்**
**லண்டனுக்கு 1 kg மிற்கு பார்சல் 600/ரூபா**
**தொடர்புகொள்ள வேண்டிய முகவரி**
MANOJ AIR TOURS PVT LTD
**32, மணிக்கூட்டு வீதி**
**யாழ்ப்பாணம்.**
**021-2223916** (சி.13111)



# 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1948 - 08 - 10 |  | 2004 - 11 - 12 |

**அமரர்**
## நாகமணி தருமராசா
**ஆவரஞ்சாட்டி, கண்டாவளை**
**திதி: 01.11.2005**

உங்கள் உயிர்காக்க முடிந்தவரை
நாம் துடித்தோம் முடியவில்லை
எங்கள் கண்முன்னேயே - உங்கள்
உயிர் போனதால் ஆனது ஓராண்டு
ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
உங்கள் ஆத்மா சாந்திபெற
நாம் இவ்வுலகில் உள்ளவரை
ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி!.... ஓம் சாந்தி!!... ஓம் சாந்தி!!!...

**தகவல்:-**
(6896) **மனைவி, பிள்ளைகள்.**

# பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள்

## மாவட்ட செயலகம்

## கிளிநொச்சி.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் அனுசரணையுடன் பொது நிர்வாக மற்றும் உள்விவகார அமைச்சினால் அமுல்படுத்தப்படவுள்ள மீட்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கான திறன் அபிவிருத்தித்திட்டத்தின் (CADREP) கீழ் கிளிநொச்சி மாவட்டத்திற்கென கீழே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | வெற்றிடம் |
|---|---|---|
| 1. | புனர்நிர்மாண பொறியியலாளர் | - 01 |
| 2. | தொழில்நுட்ப அலுவலர்கள் | - 04 |
| 3. | தகவல் உத்தியோகத்தர் | - 04 |
| 4. | நிகழ்ச்சி திட்ட அலுவலர் | - 04 |
| 5. | நிர்வாக உத்தியோகத்தர் | - 04 |
| 6. | திட்டமிடல் உத்தியோகத்தர் | - 04 |
| 7. | முகாமைத்துவ உதவியாளர் | - 08 |
| 8. | தரவு பதியுனர் | - 04 |
| 9. | சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்) | - 01 |
| 10. | நிதி உதவியாளர் | - 04 |
| 11. | அலுவலக உதவியாளர் | - 04 |

(குறைந்தது 5 வருடம் சேவையாற்றிய அனுபவம் இருத்தல்வேண்டும்)

### 1.புனர் நிர்மாண பொறியியலாளர்

**I. கல்வித்தகைமை**

கட்டட நிர்மாணத்துறையில் இளமாணிப்பட்டதாரி அல்லது தொழில்சார் தகைமை உடையவராக இருத்தல் அவசியம். முகாமைத்துவ தகைமையுடைய வருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**II. தொழில்சார் அனுபவம்**

குறைந்தது 10வருட தொழில்சார் அனுபவம் பெற்றவராய் இருப்பது அவசியம். நடுத்தர மற்றும் பாரிய கட்டட நிர்மாண நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கு பற்றியிருப்போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### 2.தொழில் நுட்ப அலுவலர்கள்

**I. கல்வித்தகைமை**

கட்டட நிர்மாணத்துறையில் தொழில்நுட்ப தகைமை அல்லது தொழில்சார் தகைமை உடையவராய் இருத்தல் அவசியம்.

**II. தொழில்சார் அனுபவம்**

குறைந்தது எட்டு வருட தொழில்சார் அனுபவம் பெற்றவராய் இருப்பது அவசியம்.

### 3. தகவல் உத்தியோகத்தர்

**I. கல்வித்தகைமை**

ஏதாவதொரு துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

**II. தொழில்சார் அனுபவம்**

குறைந்தது ஐந்து வருடகால சேவை அனுபவம்.

### 4. நிகழ்ச்சி திட்ட அலுவலர்

**I. கல்வித்தகைமை**

ஏதாவதொரு துறையில் பட்டம் பெற்றிருத்தல்.

**II. தொழில்சார் அனுபவம்**

குறைந்தது ஐந்து வருடகால சேவை அனுபவம்

### 5. நிர்வாக உத்தியோகத்தர்

**I. கல்வித்தகைமை**

க.பொ.த. உயர்தரத்தில் சித்தியும், க.பொ.த சாதாரணதரத்தில் கணிதம், தமிழில் திறமைச்சித்தியுடன், நிர்வாகமும் முகாமையும் தொடர்பான மேலதிக தகைமைகள்.

**II. தொழில்சார் அனுபவம்**

குறைந்தது எட்டு வருடகால சேவை அனுபவம்.

### 6. திட்டமிடல் உத்தியோகத்தர்

**I. கல்வித்தகைமை**

பட்டதாரியாக இருப்பதுடன் செயற்திட்டங்கள் தயாரித்தலில் அனுபவம்.

**II. தொழில்சார் அனுபவம்**

குறைந்தது ஐந்து வருடகால சேவை அனுபவம்.

### 7. முகாமைத்துவ உதவியாளர்

**I. கல்வித்தகைமை**

க.பொ.த. உயர்தரத்தில் சித்தியும், கணிதம், தமிழில் திறமைச்சித்தியுடன், கூடிய க.பொ.த.சாதாரணதரம்.

**II. தொழில்சார் அனுபவம்**

குறைந்தது மூன்று வருடகால சேவை அனுபவம்.

### 8. தரவு பதியுனர்

**I. கல்வித்தகைமை**

க.பொ.த. உயர்தரத்தில் சித்தியும், கணிதம், தமிழில் திறமைச்சித்தியுடன், கூடிய க.பொ.த.சாதாரணதரம், அத்துடன் கணனியில் பொருத்தமான தகைமை

**II. தொழில்சார் அனுபவம்**

குறைந்தது மூன்று வருடகால சேவை அனுபவம்.

### 9.நிதி உதவியாளர்

**I. கல்வித்தகைமை**

க.பொ.த. உயர்தரத்தில் சித்தியும், கணிதம், தமிழில் திறமைச்சித்தியுடன், கூடிய க.பொ.த.சாதாரணதரம் அத்துடன் கணக்கீடு நிதி தொடர்பான விசேட சான்றிதழ்.

**II. தொழில் சார் அனுபவம்**

குறைந்தது மூன்று வருடகால சேவை அனுபவம்.

### 10. சுருக்கெழுத்தாளர் (ஆங்கிலம்)

**I. கல்வித்தகைமை**

க.பொ.த. உயர்தரத்தில் சித்தியும், கணிதம், ஆங்கிலத்தில் திறமைச்சித்தியுடன், கூடிய க.பொ.த. சாதாரணதரம்.

**II. தொழில் சார் அனுபவம்**

குறைந்தது மூன்று வருடகால சேவை அனுபவம்.

### 11.அலுவலக உதவியாளர்

**I. கல்வித்தகைமை**

க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தி

இப்பதவிகளுக்கு கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படுவதுடன் ஆரம்பத்திற்கு புதுப்பிக்கக்கூடிய சாத்தியக்கூறுகளுடனான ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். இளைப்பாறிய அதிகாரிகள் மற்றும் தற்போது உத்தியோகத்தில் உள்ள பொதுச் சேவையாளர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

ஆர்வமுள்ள, தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் இரண்டு உறவினர்கள் அல்லாத நடுவர்கள் அடங்கிய தொலைபேசி இலக்கங்களுடன் சுயவிபரத்துடனான விண்ணப்பத்தை 15.11.2005 ஆம் திகதிக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மாவட்டச்செயலகம் கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல்வேண்டும்.

**தி.இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச்செயலகம்,**
**கிளிநொச்சி.**

(சி-13135)

# டில்லி குண்டு வெடிப்பிற்கு உளவுத்துறையை குறை கூறுகிறது பாரதிய ஜனதா

(புதுடில்லி)

டில்லியில் நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்புக்கு உளவுத்துறை மற்றும் உள்துறை அமைச்சகம் செயலிழந்ததே காரணம் என்று பா.ஜனதா செய்தித் தொடர்பாளர் வி.கே.மல்கோத்ரா குற்றஞ்சாட்டினார்.

டில்லி தீவிரவாதிகளின் புகலிடமாக மாறிவிட்டது என்று ஏற்கனவே தாங்கள் பலமுறை எடுத்துக்கூறியும் உளவுத்துறை அதுபற்றி கண்காணிக்க தவறிவிட்டதாக கூறிய அவர். வருங்காலங்களில் மீண்டும் இதுபோன்ற சம்பவங்கள் நடந்து விடாமல் தடுக்க உரிய முன்னெச்சரிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.





டில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவங்களில் சின்னாபின்னமாகிக்கிடக்கும் வர்த்தகநிலையங்கள்.

# பாகிஸ்தான் தீவிரவாதிகள் குண்டுவெடிப்பிற்கு பொறுப்பேற்பு?

"டில்லியில் தொடர் குண்டுவெடிப்பு சம்பவங்களை நிகழ்த்தியது நாங்கள்தான்" என்று பாகிஸ்தானின் லஸ்கர்-இ-தொய்பா இயக்க தீவிரவாதிகள் பொறுப்பு ஏற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.டில்லியில் நேற்று முன்தினம் அடுத்தடுத்து மூன்று இடங்களில் சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்ததில் நூறுக்கும் அதிகமானனோர் பலியானார்கள். மேலும் ஏராளமானோர் காயமடைந்தனர்.

இந்த இயக்கத்தைச் சேர்ந்த தீவிரவாதிகள்தான் முன்பு பாராளுமன்ற வளாகத்திற்குள்ளும், டில்லி செங்கோட்டை வளாகத்திற்குள்ளும் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீர் முதல்வராகிறார் குலாம்நபி ஆசாத் முப்தி முகமது சையது பதவி விலகினார்

காஷ்மீர் முதல்வர் முப்தி முகமது சையது பதவி விலகினார். புதிய முதல்வராக காங்கிரசைச் சேர்ந்த குலாம்நபி ஆசாத் இரண்டாம் திகதி பத்வி ஏற்கிறார். முப்தி முகமதுவின் மகள் மகபூபா துணை முதல்வர் ஆகிறார். காஷ்மீரில் 2002 ஆம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க பெரும்பான்மை கிடைக்கவில்லை.

அதைத் தொடர்ந்து மாநில கட்சியான மக்கள் சனநாயகக் கட்சி, காங்கிரஸ், மார்க்சிய கம்யூனிஸ்டு, தேசிய சிறுத்தைகள் கட்சி ஆகியவை சேர்ந்து கூட்டணி அரசு அமைத்தன.

இதன்போது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் மக்கள் சனநாயக் கட்சியைச் சேர்ந்தவரும் பிற்பகுதி காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரும் முதலமைச்சர் பதவியை வகிப்பதென இணக்கப்பாடு காணப்பட்டது.

ஒப்பந்தப்படி முதல் ஆட்சிக் காலத்தில் முற்பகுதியில் முதல்வர் பதவியை மக்கள் சனநாயக கட்சியைச் சேர்ந்த முப்திமுகமது சையது வகித்தார். இதன் பிரகாரம் பதவிக் காலம் வரும் இரண்டாம் திகதியோடு முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஆந்திராவில் நேற்றுமுன்தினம் ஆற்றுள் தடம்புரண்ட புகையிரதத்தில் சிக்குண்டவர்களை மீட்கும்பணியில் ஈடுபட்டுள்ள உலங்கு வானூர்தி

## மே.இந்தியாவுடனான போட்டிக்கு ஜஸ்ரின் லாங்கர் தகுதி



(சிட்னி)

எதிர்வரும் மூன்றாம் திகதி ஆரம்பமாகும் மேற்கிந்தியத் தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் பங்கேற்க அவுஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பட்ட வீரர் ஜஸ்ரின் லாங்கர் தகுதி பெற்றுள்ளார்.

அண்மையில் மேற்கு அவுஸ்திரேலிய அணிக்கான உள்ளூர் ஒரு நாள் போட்டியின் போது அவர் காயமடைந்தார். ஒரு போட்டியையும் தவறவிடக்கூடாது எனத் தெரிவித்துள்ள அவர் பிரிஸ்பேனுக்கு பயணமாவார். எனினும் அவர் மருத்துவ பரிசோதனைக்குட் படுத்தப்படுவார். 2001 ஆம் ஆண்டு அணியில் இணைந்த இவர் இதுவரை 53 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். இவர் அண்மையில் நடைபெற்ற விக்டோரியா அணியுடனான போட்டியில் எழும்பி வந்த பந்து அவரை தாக்கிவிட்டது. அதனால் காயமடைந்த அவர் வைத்திசாலைக்குச் சென்று கிசிச்சை மேற்கொண்டார்.

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு உதைபந்தாட்டம்

## உருத்திரபுரம் வி.க., லக்கிஸ்ரார் வி.க. போட்டி சமநிலையில் முடிவு!





கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சபையினரால் நடாத்தப்படும் கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான உதைப் பந்தாட்ட சுற்றுப்போட்டியில் நேற்று உருத்திரபுரம் விளையாட்டுக்கழகமும் லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழக அணியும் பங்குபற்றின.

நேற்று பிற்பகல் 4.00 மணிக்கு கிளிநொச்சி சந்திரன் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகிய இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்தே இரு கழக அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக மோதின. இருப்பினும் உரிய நேரம் முடிவடையும் வரை இரு அணிகளும் கோல்களைப் போடாததனால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி நிறைவு பெற்றது.

இச்சுற்றுப்போட்டியின் தொடர்போட்டியாக இன்று ஸ்கந்தபுரம் ஸ்கந்தா விளையாட்டு கழக அணியும் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய கழக அணியும் மோதவுள்ளன. போட்டிகள் பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகும். (ச)




## உலக 11 பேர் அணியைவிட எமது இளம் வீரர்கள் சிறப்பாக ஆடுவர்




பிரையன் லாறா

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக உலக பதினொருவர் அணியில் ஆடிய வீரர்களைவிட தமது இளம் வீரர்கள் சிறப்பாக ஆடுவர் என மேற்கிந்தியதீவுகள் அணியின் பிரையன் லாறா தெரிவித்துள்ளார்.அவ்வணியுடன் கடந்த டெஸ்ட் போட்டியில் 210 ஓட்டங்களால் தோல்வியடைந்த உலக அணியில் லாறாவும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

லாறா மேலும் தெரிவிக்கும் போது உலக அணி உறுதிப்படுத்தப்பட்ட அணியல்ல என்றும் தமது அணி இளம் வீரர்களைக் கொண்ட திறமை மிக்க அணி என்றும் தெரிவித்தார். லாறா குயின்ஸ் லாந்து அணியுடனான பயிற்சிப் போட்டியில் ஐந்து பந்துகளில் ஒரு ஓட்டத்தைப் பெற்று ஆட்டமிழந்தார். எனினும் இளம் வீரர் மர்லன் சாமுவல் 257 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

லாறா மேலும் தெரிவித்தபோது அவுஸ் திரேலியாவை இங்கிலாந்து ஆஷஸ் தொடரில் வீழ்த்திய முறையை அவதானித்திருப்பதாகவும் அந்த வகையில் அது தற்போது பலமிழந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## சிறிலங்கா-இந்தியா 3ஆவது போட்டிக்கு மிக உயர்ந்த பாதுகாப்பு





இந்தியா-இலங்கை கிரிக்கெட் அணிகள் இடையே மூன்றாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி ஜெய்ப்பூர் சவாய்மான்சிங் மைதானத்தில் இன்று நடைபெற இருக்கிறது. இதையொட்டி அந்த மைதானத்துக்கு கடுமையான பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருக்கிறது. மைதானத்தைச் சுற்றிலும் இப்போதே பொலிசார் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். நேற்று ராஜஸ்தான் மாநில பொலிஸ் அதிகாரி மைதானத்துக்கு வந்து பாதுகாப்பு ஏற்பாடுகளை பார்வையிட்டார். ரசிகர்கள் மைதானத்திலேயே சினிமாப் படம் பார்ப்பது போல போட்டியை பார்ப்பதற்காக ஆங்காங்கே ராட்சத திரைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அந்த திரைகளில் போட்டி நேரடி ஒளிபரப்பாக பெரிய அளவில் தெரியும்.

ஏற்கனவே இந்திய அணி நாக்பூர், மொகாலி போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. இலங்கை படுதோல்வியை அடைந்தது. இதனால் இந்திய வீரர்கள் மிகுந்த உற்சாகத்துடனும் இலங்கை வீரர்கள் சற்று சோர்ந்த முகத்துடனும் நேற்று மொகாலியிருந்து ஜெய்ப்பூர் வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு விமான நிலையத்தில் ராஜஸ்தான் மாநில கிரிக்கெட் சங்கத் தலைவர் லலித் மோடி தலைமையில் அதிகாரிகள் வரவேற்பு அளித்தனர். ஜெய்ப்பூர் சவாய் மான்சிங் மைதானத்தில் ஏற்கனவே விளையாடியுள்ள ஆறு ஒருநாள் போட்டிகளில் இந்தியா மூன்றில் வெற்றியும், மூன்றில் தோல்வியும் அடைந்துள்ளது.

இந்த மைதானத்தில் நடந்த முதல் ஒருநாள் போட்டியில் (1983) இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதின. அதில் இந்தியா நான்கு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

அடுத்து 1986 ஆம் ஆண்டு இரண்டாவது போட்டி இந்தியா - அவுஸ்திரேலியா இடையே நடந்தது. அதில் இந்தியா ஏழு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தமிழக வீரர் ஸ்ரீகாந்த் மின்னல் வேகத்தில் ஆடி 102 ஓட்டங்கள் குவித்து இந்திய அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக விளங்கினார். இலங்கைக்கு அணிக்கு இந்த ஜெய்ப்பூர் மைதானம் புதிய இடமாகும். அவர்கள் இங்கு விளையாடுகிற முதல் போட்டியே நாளை நடைபெற இருக்கும் போட்டிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

## அணியில் சேர்க்கப்படாமை கங்குலிக்குக் கடும் அதிர்ச்சி!



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் கங்குலி தற்போது ஓரங்கட்டி வைக்கப்பட்டுள்ளார். இந்தியா - இலங்கை இடையே நடந்த முதல் இரண்டு போட்டிகளுக்கும் அவரை சேர்க்கவில்லை. நேற்று முன்தினம் ஏனைய போட்டிகளுக்கு இந்திய அணி வீர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டது. அதிலும் கங்குலியின் பெயர் இடம் பெறவில்லை. இதனால் கங்குலி கடும் அதிர்ச்சியடைந்தார். அவர் வீட்டிலேயே அடைந்து கிடக்கிறார். வெளியே வரவில்லை. பத்திரிகையாளர்கள் தொடர்பு கொள்ள முயன்ற போதும் அவருடன் பேசமுடியவில்லை. அவரை போலவே கொல்கத்தாவிலுள்ள அவருடைய ரசிகர்கள் அதிர்ச்சியடைந்திருக்கிறார்கள்

அந்த ரசிகர்கள் ஆண்களும், பெண்களுமாக சுமார் 30 பேர் நேற்று கொல்கத்தா நகர வீதியில் கூட்டமாக திரண்டார்கள். அவர்கள் வாயில் கறுப்புத்துணி கட்டியிருந்தார்கள். கையில் கங்குலியின் படம் ஒட்டிய அட்டையை பிடித்திருந்தார்கள். கங்குலி வாழ்க! அவரை அணியில் சேருங்கள் அவரை ஒதுக்குவது அதிர்ச்சி தருகிறது என்ற வாசகங்கள் எழுதிய பாதாகைகளையும் ரசிகர்கள் பிடித்திருந்தனர். கங்குலியை புறக்கணித்த கிரிக்கெட் சபை தேர்வுக்குழு ஒழிக! என்று அச்சிட்ட துண்டுப்பிரசுரங்களை சாலையில் வருவோர் போவோரிடம் விநியோகித்தார்கள். சுமார் ஒரு மணி நேரம் இப்படி மௌன ஆர்ப்பாட்டம் நடத்திய பிறகு கலைந்து சென்றனர். இவர்களுடைய நூதன போராட்டத்தை பொதுமக்கள் கூடி நின்றுவேடிக்கை பார்த்தார்கள் கங்குலிக்கு சோதனை வருகிற கட்டங்களில் அவருடைய ரசிகர்கள் கொல்கத்தாவில் மட்டும் இது போல ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்துவது வாடிக்கை: ஒவ்வொரு முறையும் இந்தப் போராட்டங்கள் அவருக்கு கைகொடுக்குமெனச் சொல்லி விடமுடியாது. சில நேரங்களில் கங்குலிக்கு இந்தப் போராட்டங்கள் சிக்கலை அதிகமாக்குவதாகவே அமைந்துள்ளன.

கடந்த முறை பயிற்சியாளர் கிரேக் சப்பலுடன் கங்குலிக்கு மோதல் ஏற்பட்ட போது கொல்கத்தாவில் இந்த ரசிகர்கள் சப்பலின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டம் நடத்திய பிறகுதான் கங்குலி அணியிலிருந்து நீக்கப்பட்டார்.

## சில வாரங்களில் மீண்டும் விளையாடத்தொடங்கிவிடுவேன்



சானியாமிர்சா கடந்த சில வாரங்களாக முதுகு வலியால் சிரமப்பட்டு வருகிறார். தாய்லாந்து ஓபன் டென்னிஸ் போட்டியில் கூட அவர் அதனால் தான் விளையாடாமல் திரும்பினார். அதன்பிறகு அவர் எந்தப் போட்டிகளிலும் விளையாடவில்லை. சில பொதுநிகழ்ச்சிகளில் மட்டும் கலந்துகொண்டு வருகிறார்.

இந்த நிலையில் சானியா மிர்சாவை அண்மையில் டில்லியில் நிருபர்கள் பேட்டி கண்டனர். அப்போது அவர், "நான் இன்னும் இரண்டு வாரங்களில் உடல்நிலை முழுமையாக தேறிவிடுவேன். சனவரி மாதம் மீண்டும் டென்னிஸ் அரங்கில் குதிப்பேன்" என்று கூறினார்.

"நான் நல்லமுறையில் குணமடைந்து வருகிறேன். முன்பைவிட எனக்கு காயம் எவ்வளவோ பரவாயில்லை. இன்னும் இரண்டு வாரங்களில் நன்கு குணமடைந்து விடுவேன். சனவரிமாதம் டென்னிஸ் அரங்கில் மீண்டும் விளையாடத் தொடங்குவேன். முதல்தர வீரர் ரோஜர் பெடரர்-டோனி ரோச்சர் போன்ற வீரர்களுடன் சேர்ந்து செயல்பட இப்போது எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதை நான் ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறேன்" என்று சானியா மேலும் பேசுகையில் தெரிவித்தார்.

## இந். – சிறிலங்கா டெஸ்ட் போட்டி மைதானங்கள் அறிவிப்பு


இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து ஒருநாள் போட்டிகளில் விளையாடி வரும் இலங்கை அணி போட்டி முடிந்து நாடு திரும்பி விட்டு டிசம்பர் மாதம் மீண்டும் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து மூன்று டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணியுடன் விளையாடும்

அதன்படி வரும் டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி முதல் ஆறாம்திகதி வரை முதலாவது டெஸ்ட் போட்டியும் 10 முதல் 14 வரை இரண்டாவது போட்டியும் 18 முதல் 22 வரை மூன்றாவது போட்டியும் முறையே டில்லி, கான்பூர் சென்னை ஆகிய இடங்களில் நடைபெறும்.

அதேபோல் அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்பிரல் மாதங்களில் இங்கிலாந்து அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடுகிறது. மூன்று டெஸ்ட் மற்றும் ஏழு ஒருநாள் போட்டிகளில் இந்திய அணியுடன் மோதுகிறது.

இதில் முதல் டெஸ்ட் போட்டி மார்ச் எட்டாம் திகதி அகமதாபாத்தில் தொடங்குகிறது. அடுத்த போட்டி 16ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நாக்பூரிலும் மூன்றாவது போட்டி 25 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை மும்பையிலும் நடைபெறும். ஏப்பிரல் நான்காம் திகதி தொடங்கி 22ஆம் திகதி வரை ஒரு நாள் போட்டிகள் நடைபெறும்.இவை 4.7,10.13, 16.19,22 ஆகிய திகதிகளில் நடைபெறும். இந்தப் போட்டிகள் கோவா, இந்தூர், கவுகாத்தி பரிதாபாத், கட்டாக், கொச்சி, விசாகப்பட்டிணம் ஆகிய நகரங்களில் நடைபெறும்.

## சிந்தனைக்கு



செல்லுங்கள்- வீழ்த்துங்கள் - வெல்லுங்கள்; இதுதான் போரின் உண்மைத் தாற்பரியம்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 31.10.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## சனநாயக உரிமை மறுப்பு!

தமிழ் மக்களின் வாக்குரிமையை மறுக்கும் வகையில் அதாவது எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில், வடக்கு - கிழக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கு தேர்தலில் பங்கேற்பதைத் தடை செய்யக்கோரும் மனுவினைச் சிறிலங்கா உயர்நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

சிறிலங்கா உயர்நீதிமன்றத்தின் இம்முடிவானது தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதன் பொருட்டு வழங்கப்பட்டது என்ற அபிப்பிராயத்திற்கு எவரும் வருவதற்கு [illegible]ன்பாக இலங்கை அரசின் இறைமையைப் பாதுகாப்பதற் கானது என்பதே பொருத்தப்பாடானதாகும். ஏனெனில், நீதிமன்றம் இவ்வழக்கில் வாதிகளுக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கியிருக்குமேயானால், தமிழ் மக்கள் தமக்கென ஓர் ஆட்சியை உருவாக்குவதற்கு ஆதரவாகத் தீர்ப்பளித்ததாகவே [illegible] அமைந்துவிட முடியும்.

[illegible]அதாவது அவ்வாறானதொரு தீர்ப்பு விடுதலைப்புலிகளின் க[illegible]ப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் உள்ள மக்கள் வேறொரு அ[illegible]சின் கீழ் வாழ்பவர்கள் என்பதைச் சிறிலங்கா உ[illegible]நீதிமன்றமே ஏற்றுக்கொண்டதாகிவிடும். ஆகையினால், அ[illegible]கள் தமக்கென ஒரு அரசை ஸ்தாபிப்பதும், நி[illegible]தும் சரியானதே என்பதை ஒப்புக்கொண்டதாகிவிடும். [illegible]யக ஆட்சியை மக்கள் ஆட்சி என்று கூறுவதும் உ[illegible]னெனில் இவ்ஆட்சியில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிர[illegible]கள் ஆட்சியை நடத்துகின்றனர். ஆகையினால், இத் தே[illegible]களில் மக்கள் பங்களிப்பானது அவசியமானதாகும். இந்[illegible]லையிலேயே இது மக்கள் ஆட்சி என்றும், சனநாயக ஆட்சி என்[illegible]ம் சொல்லத்தக்கதாக இருக்கும்.

[illegible]கையினால், இலங்கையிலுள்ளது சனநாயக ஆட்சி என்ற வ[illegible]தைப் பெறவும், மக்கள் ஆட்சி என்று கூற[illegible]கொள்வதற்கும் ஆட்சியில் மக்கள் பங்கேற்கின்றனர் எனக் காட்[illegible]கொள்ள வேண்டியது அவசியமானதாகும். ஆனால், மக்[illegible] தேர்தலில் பங்கேற்பதற்குத் தடைபோடுவது, இடையூறு வி[illegible]விப்பது என்பவை எல்லாம் மக்களை ஆட்சியில் இருந்து அ[illegible]யப்படுத்துவதாகவே ஆகிவிடும்.

சிறிலங்கா ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்கவும், ஆட்சியில் த[illegible]மை இணைத்துக் கொள்ளவும் தமிழ் மக்கள் அக்கறை கா[illegible]டாதுவிடினும் சிறிலங்கா அரசைப் பொறுத்து இன்று த[illegible]ழர்களை இணைத்துக்கொள்ள வேண்டியது அ[illegible]சியமானதொன்றாகும். அவ்வாறு இல்லாதுவிடில், தமிழ் மக்களின் தனியரசுக் கோரிக்கைக்கு ஏற்றவகையில் சிறிலங்கா அரசும் செயற்படுவதாகவே கொள்ளவேண்டியிருக்கும்.

சனாதிபதித் தேர்தலைப் பொறுத்தும்சரி, கடந்த பொதுத்தேர்தலின்போதும்சரி கொத்தணி தேர்தல் வாக்குச் சாவடிகளை அமைத்துத் தமிழ் மக்களின் வாக்குரிமையை உறுதி செய்யத் தேர்தல் ஆணையாளர் முயற்சித்துள்ளார். ஆனால், இது எவ்வளவு தூரம் பொருத்தப்பாடானது? மக்கள் ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்க எந்தளவு வழி செய்யத்தக்கது [illegible]ன்பதும் கேள்வி[illegible]ரியதே.

அதாவது தே[illegible]லில் மக்கள் சுதந்திரமாகவும், இடையூறுகள் இன்றியும் வாக்[illegible]ரிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதே சிறிலங்கா அரசியல் யாப்பு விதிமுறையாகும். இதற்கு ஏற்ற ஏற்[illegible]டுகளை மேற்கொள்ளுதல் தேர்தல் ஆணையாளரின் கடப்பாடாகும். இது தவறும்பட்சத்தில் தேர்தல் ஒழுங்கான முறையில் நடந்ததாக அர்த்தம் கொள்ள முடியாது.

கடந்தகால சில சம்பவங்கள் கொத்தணி தேர்தல் வாக்களிப்புமுறைதோல்விகண்டதைச் சுட்டிக்காட்டு பவையாகவுள்ளன. எடுத்துக்காட்டாக கொத்தணி வாக்குச் சாவடிக்கு வாக்களிக்கத் தமிழ்மக்கள் செல்லமுடியாது சிறிலங்கா ஆயுதப்படையினர் தடை விதித்ததுண்டு. இத்தடைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் இராணுவ அதிகாரிகள் நீதிமன்றத்தால் எச்சரிக்கப் பட்டதும் உண்டு.

இதேபோன்று கொத்தணி வாக்குச்சாவடி முறை மூலமான தேர்தல் முறையே தவறானது. தமது சனநாயக உரிமைகளை மறுப்பதாக அன்றி பயன்படுத்த முடியாததொரு நிலையை தோற்றுவிப்பதாக உள்ளதென நீதிமன்றம் சென்றால் தேர்தல் ஆணையம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாவது தவிர்க்க [illegible]டியாததாகவே இருக்கும்.

அதாவது தமிழ் மக்கள் தமது சனநாயக உரிமைகளை நிறைவேற்ற உரிய நடவடிக்கையை மேற்கொண்டால் கொத்தணி தேர்தல் முறை கேள்விக்குள்ளாகிவிடும். இது சிறிலங்கா தேர்தல் ஆணையாளருக்கும் உயர் நீதிமன்றத்திற்கும் புரியாததொரு விடயமாக இருக்கமாட்டாது.

இந்தவகையில் தமிழ் மக்களின் வாக்குரிமையையே பறிக்கும். அன்றி இல்லாதொழிக்கும் நடவடிக்கையானது இலங்கை அரசால் தமிழ் மக்களின் உரிமைகள் மறுக்கப்படுவதாகவே அர்த்தம் கொள்ளத்தக்கதாகும். அதாவது பேச்சளவிலா யினும் வழங்கப்பட்டதான உரிமைகள் மறுக்கப்படுகின்றது. என்பது உறுதி செய்யப்பட்டதாகிறது இவை வெளிவருவதையே தமிழ் மக்களும் எதிர்பார்த்திருப்பதால் இவ்விடயத்தில் சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ் மக்களை தமது பாதையில் செல்லத்துணை புரிகின்றனர் என்றே கொள்ளலாம்.




# இராணுவத்தினர் மனைவியரை துன்புறுத்துவது யுத்த நிறுத்தத்தின் பின் குறைவடைந்துள்ளது

*–'வின்'பெண்கள் அமைப்பு தெரிவிப்பு*

(கொழும்பு)

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தால் சிறிலங்கா இராணுவத்தினர் தமது மனைவியரை சித்திரவதை செய்வதுதொடர்பான முறைப்பாடுகள் குறைந்துள்ளதாக பெண்களுக்கான அமைப்பு ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பாக 'வின்' என்ற பெண்கள் அமைப்பின் நிர்வாக இயக்குநர் சாவித்திரி விஜசேகர கூறியதாவது:.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் 2002 ஆம்ஆண்டு பெப்ரவரியில் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து தங்களது மனைவியரை சிறிலங்கா இராணுவத்தினர் சித்திரவதை செய்வது தொடர்பான முறைப்பாடுகள் கணிசமான அளவுக்குக் குறைந்துள்ளன.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இல்லாத காலத்தில் நாள்தோறும் இருபது இராணுவத்தினரின் மனைவியர் தங்களது அமைப்பிடம் கணவரின் சித்திரவதை குறித்துமுறைப்பாடு செய்து வந்தனர்.

வடக்கு கிழக்கில் போர்ச் சூழலிலிருந்து விடுபட்டு விடுமுறைக்கு வீடு திரும்பும் சிறிலங்கா இராணுவத்தினர் தமது மனைவியரை அடித்து உதைத்து சித்திரவதை செய்து வந்தனர். இராணுவத்தினரது குடும்பவிவகாரங்களினால் இந்த சித்திரவதைகள் நிகழவில்லை. போர்ச் சூழல் அழுத்தங்களாலேயே இந்த சித்திரவதைகளை அவர்கள் மேற்கொண்டார்.

அனுராதபுரம் மற்றும் மாத்தறை பிரதேசங்களிலிருந்துதான் இதுதொடர்பிலான அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. யுத்தநிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்தது முதல் இந்த முறைப்பாடுகள் குறையத்தொடங்கி யுள்ளன என்றார் அவர்.

# தமிழர்களுக்கு வாக்களிக்கும்உரிமை மறுப்பு; கொழும்பில் ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடு

(கொழும்பு)

தமிழர் தாயகப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்து நவம்பர் ஏழாம் திகதி ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பில்ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

நாடு முழுவதுவுள்ள தமது கட்சியினரை நவம்பர் ஏழாம் திகதி கொழும்புக்கு அழைத்து வருமாறு அக்கட்சியின் தலைவரும் சனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரம சிங்க உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே தமிழர்களுக்கான வாக்களிக்கும் உரிமை மறுக்கப் பட்டதைக் கண்டித்து சில சமூக அமைப்புக்களின் சார்பில் நவம்பர் மூன்றாம் திகதி கொழும்பில் ஆரப்பாட்டம்நடாத்தப்பட உள்ளது.

தமிழர் தாயகப் பிரதேசத்திலிருந்து வாக்களிக்க வரும் வாக்காளர்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர்தடுக்கக் கூடாது என்றும் அப்படி தடுக்கும் நடவடிக்கையானது தனித் தமிழீழத்தை அங்கீகரிப்பது போலாகிவிடும். அவர்கள் சுதந்திரக் கட்சியை எதிர்த்து வாக்களிக்கநேரிடும் என்று தனது கட்சியினருக்குசு.க தலைவர் சந்திரிகா குமாரதுங்க அறிவுத்தல் விடுத்துள்ளார்.

கடந்த வாரத்தில் சிறிலங்காவின்தலைமை நீதிமன்றில் தமிழர் தாயகப் பகுதிகளில்சிறிலங்கா சனாதிபதி தேர்தலைநடத்த தடை விதிக்க கோரி இரண்டு சனாதிபதி வேட்பாளர்கள் வழக்குத் தொடர்ந் தனர். இந்த வழக்கின் விசாரணை எதிர்வரும் நவம்பர்ஏழாம் திகதி நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சனாதிபதித் தேர்தலை குழப்ப கருணா குழுவினர் தீர்மானம்

*–கொழும்பு ஆங்கில இதழ் தகவல்.*

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை குழப்புவதற்கு கருணா குழுவினர் தீர்மானித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. கருணாவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் மூலம் இந்தவிடயம் தெரியவந்திருப்பதாக கொழும்பு ஆங்கில நாளிதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்க் கட்சித் தலைவருக்கு மட்டக்களப்பு மக்கள் வாக்களிக்கக் கூடாதென அறிவுறுத்தும் துண்டுப்பிரசுரங்களை, கருணா குழுவினர் மட்டக்களப்பில் விரைவில் விநியோகிக்கவிருப்பதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள் ளது. அத்துடன், கிழக்கு மாகாணத்தில் சனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு கருணா தரப்பினர் அச்சுறுத்தல்கள் விடுத்திருப்பதாகவும், எதிர்வரும் தேர்தல் தினத்தன்று கிழக்கிலுள்ள அனைத்து வாக்குச் சாவடிகளுக்குச் செல்லவிருக்கும் கருணாகுழுவினர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப் பவர்களை கண்காணிக்க விருப்பதாகவும், இராணுவத்தினரின் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அந்த ஆங்கில ஊடகம் தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

# பறவைக் காய்ச்சலை தடுக்க இலங்கையில் மருந்து இல்லை

(கொழும்பு)

பறவைக் காய்ச்சல் இலங்கையைத் தாக்கும் பட்சத்தில் அதற்குரிய மருந்து முற்றாக இல்லை என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. ஏனைய ஆசிய நாடுகள் இந்த நோயை முறியடிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளன.

2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதன் முதலாக தென்கொரியாவில் பறவைக்காய்சல் கண்டுபிடிக்கப் பட்டது.அதன் பின்னர், அண்மைக் காலத்தில், ஒன்பது ஆசிய நாடுகளை இந்த நோய் தாக்கியுள்ளது.

இதேவேளை சுகாதார அமைச்சு அதிகாரிகள் இந்த மருந்தை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு உள்ளூர் முகவரை வேண்டியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இந்த விசேட மருந்தை உடனடியாக இறக்குமதி செய்வதில் பல தடைகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

# மனிதமனங்களைப் பண்படுத்துகின்ற அபாரசக்திபடைத்தவை கலைகள்

## சிவசத்தியமோகனின் அரங்கேற்றவாழ்த்துச் செய்தியில் அரசியல்துறைப்பொறுப்பாளர்

(கிளிநொச்சி)

மனித மனங்களைப் பண்படுத்து கின்ற அபார சக்தி படைத்த அற்புத மருந்தாகக்கலைகள் காணப்படு கின்றன.இன்றைய நவீன விஞ்ஞான உலகமே இக்கூற்றோடு ஒத்திசைந்து போவது கலைகளின் அற்புத சக்திக்குச் சான்றாகின்றது. எல்லோராலும் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய எளிமையான மொழியாகவும் கலைகள் காணப்படு கின்றன. இதனால் தான் எமது தேசியத் தலைவர் அவர்கள் கலை கலைக்காக அன்றி மக்களுக்காகப் படைக்கப்பட வேண்டும். என்ற உயரிய எண்ணத்தோடு கலைக்கு மதிப் பளித்து கலைஞர்களையும் கௌர வித்து வருகின்றார்.

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற கலாவித்தகர் சிவ நாதன் சிவசத்திய மோகனின் இசை அரங்கேற்றத்திற்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

மனித ஆன்மாவைத் தொட்டு நிற்கின்ற ஆய கலைகளுக்குள் சங்கீதக் கலையினை முறைப்படி பயின்று இன்று அரங்கேற்றங்காணும் சிவநாதன் சிவசத்தியமோகன் ஒரு சிறந்த கலைஞர். எமது விடுதலைப் போராட்டத்தினை ஆழமாக நேசித்து, அதன் செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபட்டு வரும் குடும்பப் பின்னணியைக் கொண்டவர். மல்லாவி நுண்கலைக் கல்லூரியின் அதிபராகப் பணியாற்றி வரும்இவர் நீண்ட காலமாகவே கலை பண்பாட்டுக் கழகத்துடன் இணைந்து நின்று கலைப்பணியாற்றி வருகின்றார். தொடருகின்ற தேச விடுதலைப் பயணத்தில் திடகாத்திரமான இவரது கலைப்பணியில் தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார்.

இன்றைய நாள் மகிழ்விற்குரிய நாள் ஏழு சுரங்களால் எல்லை களற்று விரிகின்ற இசைக் கோலங்களை சிவசத்திய மோகன் தனது சாரீர அசைவுகளால் அற்புதங்கள் பல செய்து சபையோர் முன் தனது கலைக்கான அங்கீகாரத்தைப் பெறுகின்ற நன்நாள். தொடருகின்ற இவரின் இசைப் பயணத்தில் சங்கீதக் கலையின்சகலகலை அம்சங்களையும் கற்ற றிந்தவிற்பன்னராக வரவேண்டு மெனவும் எம்தேசியத் தலைவரின் எண்ணக்கருவுக்கு வண்ணஉருக்கொடுத்து இசையுலகின் சிகரங்களைத் தொட வேண்டு மெனவும்மனதார வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியும் மன நிறைவும் அடைகின்றேன் என அவ் வாழ்த்துச் செய்தியில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# தேர்தல் வன்முறைகளை மூடிமறைக்க சிறிலங்காப் பொலிசார் தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதித்தேர்தல் வன்முறை தொடர்பான முறைப்பாட்டு விபரங்களைத்தடை செய்து மூடி மறைக்க சிறிலங்கா பொலிஸ் முடிவு செய்துள்ளதாக தெரிகிறது.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கவுடனான ஆலோசனைக் குப் பின்னர் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ இம் முடிவை மேற்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சந்திரா பெர்னாண்டோ, தேர்தல் வன்முறை எண்ணிக் கைகளை நாம் தணிக்கை செய்ய வில்லை. ஆனால் அந்த விவரங் களை பகிரங்கப்படுத்த மாட்டோம். அதே நேரத்தில் பொலிஸ் கோப்பு களில் அது பதிவேற்றப்படும் என்றார்.

தேர்தல்முறைப்பாட்டு எண்ணிக் கைகளை வெளியிடுவதன் மூலம் வன்முறைகளைக் கட்டுப்படுத்திவிட முடியாது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு தேர்தல் முறைப்பாட்டு எண்ணிக்கைகள் 50 வீதம் குறைந் துள்ளன என்றார்.

கடந்த தேர்தலைப்போல் இப்போது வன்முறைகள் தொடர்பான எண்ணிக்கைகளை பகிரங்கப்படுத்து வதால் மக்கள் மனதில் எதிர் மறையான விளைவுகளை ஏற்படுத்து வதால் அதைத் தவிர்க்க நாம் முடிவு செய்துள்ளோம் என்றும் அவர் கூறினார்.

ஒரு தரப்பினர் 500 முறைப் பாடுகளை பதிவு செய்தால் மற்றொரு தரப்பினர் அதற்கும் கூடுதலான முறைப்படுகளைப் பதிவு செய்ய முனைப்பு காட்டுகின்றனர். இந்த எண் ணிக்கையில் ஏற்படும் முனைப்பு களின் முடிவில் வன்முறைகள் தாம் அதிகரிக்கும் என்றும் அவர் தெரி வித்தார்.

தேர்தல் வன்முறைகளை பகிரங் கப்படுத்துவதன் மூலம் சிறிலங்கா அரசாங்கத்தின் மீதான சர்வதேச சமூகத்தின் மதிப்பும் பாதிக்கப்படும் அதனால் இந்த எண்ணிக்கைகளை பகிரங்கப்படுத்த வேண்டாம் என பொலிஸ்மா அதிபர் முடிவு செய்துள்ளதாகவும் அந்தப்பேச்சாளர் கூறினார்.

# புத்தூரில் ஆர்ப்பாட்டம் செய்தோரை அடையாளம் காட்டுமாறு படையினர் மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் கிழக்கில் படை யினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங் களில் ஈடுபட்டோரை இனம் காட்டு மாறு சிறிலங்கா படையினர் பொது மக்களை மிரட்டிவருகின்றனர். இத னால் அப்பகுதி மக்களிடையே பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

கடந்த வெள்ளி அதிகாலை புத்தூர் கிழக்கு அன்னமார் கோவிலடி இராணுவமுகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் அப்பகுதியில் உள்ள வீடொன் றினுள் நுழைந்து அங்கிருந்த பெண் களுடன் தகாதமுறையில் நடந்து கொண்டதால் ஆத்திரமடைந்த மக்கள் வீதிகளில்இறங்கி படையினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

இவ்வாறு படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டப்போராட்டங்களை நடத்தி யோரை இனம் காட்டுமாறு வற்புறுத் தியே படையினர் பொதுமக்களை மிரட்டிவருகின்றனர்.

இதனால் பீதியடைந்துள்ள அப்பகுதி மக்களும், இளைஞர், யுவதிகளும் தமது வீடுகளில் தங்காது அங்கிருந்து வெளியேறி தூர இடங்களிலுள்ள நண்பர், உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இது விடயமாக தாம் கண் காணிப்புக் குழுவிடம் முறை யிட்டுள்ள போதும் அவர்கள் எந்த நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை என்றும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

# வரவு-செலவுத் திட்டத்தில் மகிந்தவின் சிந்தனைகள் உள்ளடக்கப்படமாட்டாது

## -அமைச்சரவையின் அங்கீகாரம் தேவை என்கிறார் சந்திரி...

(கொழும்பு)

மகிந்தவின் நோக்கை எதிர்வரும் வரவு-செலவுத்திட்டத்தில் உள்ள டக்கவேண்டுமாயின் அதற்கு அமைச் சரவை அங்கீகாரத்தை பெற வேண்டும் என சனாதிபதி தெரி வித்துள்ளார்.

அண்மையில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த போது சனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

மகிந்தவின் நோக்கு என்ற மகிந்தவின் சிந்தனையே எதிர்வரும் வரவு-செலவுத்திட்டத்தில் உள்ளடங் கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷதெரிவித்து வரு கிறார். இது சனாதிபதித் தேர்தலில் பாரிய பின்விளைவுகளை கொண்டு வரும் என ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியுடனான சந்திப்பின் போது சுட்டிக்காட்டினார்.இதற்கு பதிலளித்த சனாதிபதி வரவு-செலவுத்... யோசனைகளை முன்... போது வெறுமனே வாக்... மாத்திரம் தெரிவிக்க... நாட்டின் நிதியோட்டங்க... பவே வரவு-செலவுத்... தயாரிக்கப்படவேண்... நிலையில் உறுதி... அனைத்தும் வரவு-செ... திட்டத்தில் இடம்பெற வாய்ப்... என சனாதிபதி தெரிவித்து...

## 50 கிலோமீற்றர்....

ஆனால் இலங்கையில் இடம்பெறும் தேர்தலில் அப்படியான ஒழுங்குகள் எதுவும் செய்யப்பட வில்லை எனவும் அவர் விசனம் தெரிவித்ததாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரின் கருத்துக்கள் தேர்தல்ஆணையா ளரிடம் தெரிவிக்கப்பட்டதாகவும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது. (32)

## கோண்டாவிலில்...

கைக்குண்டு வீச்சை நடாத்திய தாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த இரு பொலி சாரும் யாழ்.போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்... இராணுவச்சிப்பாய் பலாலி ... மருத்துவமனைக்கு எ... செல்லப்பட்டார்.

## மீசாலையில்...

இதனால் வாகனம் சேத மடைந்ததாகவும் கொழும்பிலுள்ள இராணுவப் பேச்சாளர் அலுவலகத் தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கூறி யுள்ளார்.

இதேவேளை இந்த வாகனத்தில் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் இருந்ததாகவும் அவர்கள்... ததனால்காயங்கள் இன்றி த... தாகவும் அந்த அதிகாரி மே... கூறியுள்ளார்.

இப்பகுதியில் நேற்று சிறிலங்... படையினரும் பொலிசாரும் குவி... பட்டு தேடுதல் நடவடிக்கை ... கொள்ளப்பட்டது. (28...

## வாகரையில்....

விடுதலைப்புலிகள் உடனடியாக பதில் தாக்குதலை நடத்தியதாக இந்தச் சம்பவம் தொடர்பாக வெளி யாகியுள்ள தகவல்கள் தெரிவிக் கின்றன.

கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் கொல்லப்பட்ட தமது உறுப் பினரையும் காயமடைந்த மேலும் மூவரையும் தூக்கிக்கொண்டு அப் பகுதியிலுள்ள இராணுவ முகாம் பக்கமாகத் தப்பிச்சென்றுள்ள தாகவும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## இராணுவ...

சிறிலங்கா இராணுவ புல னாய்வுத்துறையின் தலைமை அதிகாரிகளில் ஒருவராக விளங்கிய இவர், முன்பு கொழும்பின் பாதுகாப்பு அதிகாரியாக கடமையாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொலைக்கு தனிப்பட்ட விரோதமே காரணம் என்றும் ரிஸ்வினுடன் வாகனத்தில் பயணித்த சிங்களவர் ஒருவரே அவரை சுட்டுக்கொன்றதாகவும் செய் திகள் வெளியாகியுள்ளன. கொலை யாளியான சிங்களவருக்கும் சிறி லங்காவின் பாதாள உலகக் குழு வினருக்கும் தொடர்புகள் இருப் பதாகவும் கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் படு காயமடைந்ததாலும் மதுபானம் அருந்தியிருந்ததாலும் உணர்வற்ற நிலையில் வாகனத்திலேயே ரிஸ்வின் விழுந்து கிடந்தார்.

ரிஸ்வியின் நிலைமை குறித்து சுட்டுக்கொன்ற சிங்களவரே ரிஸ்வி யின் வீட்டுக்குத் தொலைபேசிமூலம் தகவல் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது,

இதேவேளை இச் சம்பவம் தொடர்பாக நான்குபேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (32)

## அரசடி....

இடத்தில் பெருமளவு இராணுவம் குவிக்கப்பட்டதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

உந்துருளி ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்களே கைக்குண்டை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவ இடத்துக்கு வந்த ... காணிப்புக் குழுவினர் நிலை... களைப் பார்வையிட்டனர். வெடிக்... நிலையில் ... நந்த கைக்குண்... இராணுவ... பொருள் அகற்... குழுவினர் செயலிழக்கச் செய்த... (33,37)

## இராணுவத்துடன்...

சனாதிபதிக்கு அளிக்கவில்லை.

சிறிலங்கா இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் குழுவினரால் கௌ சல்யன் படுகொலை செய்யப்பட்டி ருக்கும் நிலையில் அந்த சிறிலங்கா இராணுவத்தை இயக்குகிற சிறி லங்கா சனாதிபதி அமைத்துள்ள சனாதிபதி ஆணைக்குழுவின் ஆணைக்குழுவிடம் நீதியான விசார ணையை எதிர்பார்க்க முடியாது என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த ஆணைக்குழுவை நிராகரித் திருந்தனர்.

அதேபோல் மட்டக்களப்பு, அம் பாறை தமிழ் மக்களும் சிறிலங்கா சனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர்.

இதனால் கௌசல்யன் கொலை தொடர்பாகசிறிலங்கா இரா ணுவத்தரப்பு மற்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரது கருத்துக் களை மட்டுமே ஆணைக்குழுவால் பெறமுடிந்தது.

## புத்தூர்...

கடைப்பிடிக்கப்பட்டது.

நேற்றைய துக்கதினத்தில் வர்த்தகநிலையங்கள் பொது நிறு வனங்கள், அரசசெயலகங்கள், பேருந் துகள், வீதிகள் என அனைத்து இடங் களிலும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப் பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அதி காலை புத்தூர் கிழக்கு அன்னமார் கோவிலடியில் உள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் அப்பகுதியில் உள்ள வீடொன்றினுள் நுழைந்து அங்கு தங்கியிருந்த பெண்களுடன் தகாத முறையில் நடந்து கொண்டதன் விளைவாக ஆத்திரமடைந்த பொதுமக்கள் இராணுவத்தினருக்கு எதிராக ஆர்ப் பாட்டங்களை நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டி யடிப்பதற்காக இராணுவமும், பொலி சாரும் இணைந்து மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் குண்டாந்தடியடி என்பவற்றால் ஒருவர் கொல்லப்பட்டதுடன் 15 பேர் காய மடைந்தனர்.

இவ்வாறாக பொதுமக்கள் மீது படையினர் மேற்கொண்ட மிலேச்சத் தனமானதாக்குதல்களைக் கண்டித்தேஇத்துக்கதினம் அனுஷ்டிக் கப்பட்டது. (சோ,லோ,08,33)

## கண்ணீரஞ்சலி



வேலுப்பிள்ளை சின்னையா

(17ஆம் கட்டை நெடுங்கேணி)

தோற்றம் 1932–05–12

மறைவு 2005–10–2...

வன்னியன் தொழிலகத்தில் பணிபுரியும் திரு. ஜெயரட்ண... அவர்களின் தந்தையார் சாவடைந்த செய்தி கேட்டு துயருறு... அன்னாரின் குடும்பத்துடன் துயரினைப் பகிர்ந்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

வன்னியன் தொழிலகம் பணியாளர்கள்

ஒட்டுசுட்டான்,
முல்லைத்தீவு.

(6899)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.